**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (“கூட்டுத்தாபனம்”) மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) இன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை

பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

-----------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம்மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முழுமையாக பெறுமானத்தேய்மானம் செய்யப்பட்ட சொத்துகள் ரூபா. 2,526 மில்லியன் அவர்களின் பயனுள்ள பொருளாதார வாழ்நாளை மீள்மதிப்பீடு செய்யாமல், எல்கேஏஎஸ் 16 இற்கு இணங்கக் கணக்கிடப்படாமல், கூட்டுத்தாபனத்தால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. மேலும், கணக்காய்வு பரிசோதனை போது மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 22 காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றில் காணியாக காட்டப்பட்ட தொகை கணிசமாகக் குறைவடைந்திருந்தது. | குறிப்பிட்டார். முழுமையாக பெறுமாதேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் (பிபிஈ) பயனுள்ள வாழ்க்கையின் மீள்மதிப்பீடு கணக்கீட்டு சரிசெய்தலுடன் நடைமுறையில் பொருந்தாது. மேலும் பயனுள்ள ஆயுட்காலம் இருப்பிடங்களின் பயன்பாட்டு முறையைப் பொறுத்தது மற்றும் வாழ்நாள் முழுவதும் மீள்மதிப்பீடு செய்வதற்கான கணிசமான செலவை CPC ஏற்படுத்தக்கூடும். முழுமையான உரிமையில்லாமல் மீள்மதிப்பீடு செய்யப்படாத 11 காணிகள். ஆனால் அந்த காணிகளின் உரிமையை சட்டப்பூர்வ செயல்பாடு மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த காணிகளில் உரிமையை அனுமதித்த பிறகு மீள்மதிப்பீட்டில் கணக்கு சரிசெயயப்பட்டது | இது நியமங்களை கடைபிடிக்க வேண்டும் மற்றும் முறையான பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) துணைக்கம்பனியின் மீதிகள்** | | |
| (i) கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின்படி, துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினல் (CPSTL)இற்கு செலுத்த வேண்டிய தேறிய பெறுமதி ரூபா.5,965.04 மில்லியன் இதில் CPSTL இற்கு செலுத்தப்பட வேண்டிய மற்றும் பெறப்பட வேண்டிய தொகை முறையே ரூபா. 6,565.79 மில்லியன் மற்றும் ரூபா.600.75 மில்லியனாகும். எவ்வாறாயினும், 2020 ஆம் | CPC பேரேட்டின் படி, CPSTL இற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா.6,575.785 மற்றும் CPSTL இலிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா.600.747 ஆகும். அதன்படி, தேறிய தொகை ரூபா.5,965,038 ஒருங்கிணைந்த நிதிக்சூற்றுக்களை தயாரிப்பதற்காக நீக்கப்பட்டது. | இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் சரி செய்ய எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் சரியான புள்ளிவிவரங்கள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட |

| | | |
|---|---|---|
| ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட CPSTL இன் வரைவு நிதிக்கூற்றின்படி, கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட வேண்டிய தேறிய தொகை ரூபா.7,668.03 மில்லியன் ஆகும்.கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் பெறப்பட வேண்டிய தொகையை ஒப்பிட்டு முறையே ரூபா.8,017.94 மில்லியன் மற்றும் ரூபா.349.92 மில்லியனாக காணப்படுகின்றது. எனவே, இணக்கம் செய்யப்படாத வேறுபாடு ரூபா.1,702.99 (பெறத்தக்க ரூபா.1,452.16 மில்லியன் மற்றும் செலுத்த வேண்டிய ரூபா. 250.83 மில்லியன்) இரண்டு கம்பனிகளின் துணைக்கம்பனிகளின் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | | வேண்டும்.. |
| (ii) மீளாய்வாண்டில் CPSTL இன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றில் கூட்டுத்தாபனத்திலிருந்து தேறிய பெறப்பட வேண்டிய தொகை ரூபா.6,958.93 மில்லியன் செலுத்தப்பட வேண்டிய தொகையிலிருந்து பெறப்பட வேண்டிய தொகையை ஒப்பிடும் போது கூட்டுத்தாபனத்திற்கு முறையே ரூபா.7308.85 மில்லியன் மற்றும் ரூபா.349.92 ஏற்கனவே ஒருங்கிணைக்கப்பட்ட புள்ளிவிவரங்களுக்கு எதிராக தொகுதி கணக்குகள் காணப்பட்டன. | இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் செய்யப்படாத நிலுவைகளை இனங்காண்பதற்காக துணைக்கம்பனிகளின் நிலுவைகளுக்கும் இடையேயான நிலுவைகளின் இணக்கக்கூற்றில் இணைக்கப்பட்டுள்ளன. | இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் சரி செய்ய எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் சரியான புள்ளிவிவரங்கள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) மீளாய்வாண்டில் CPSTL இன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்று மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வியபாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய தொகை ரூபா.782.76 மில்லியன், வருமானவரிக் கொடுப்பனவு ரூபா. 182.20 மில்லியன், வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 60.24 மில்லியன், ஏனைய தொழிற்பாட்டு செலவின தொகை ரூபா. 12.12 மில்லியன், ஆதனம், பொறி, இயந்திர மற்றும் உபகரணங்களின் தொகை ரூபா.26.67 மில்லியன் மற்றும் வருமான வரி செலவினம் ரூபா. 3.31 மில்லியன் வேறுபாடாக அவதானிக்கப்பட்டன. | சட்டப்பூர்வ தேவைகளின்படி, கணக்காய்வு நோக்கத்திற்காக CPC ஆனது 28.02.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முனனர் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். சட்டப்பூர்வ காலக்கெடுவைச் சந்திக்க துணைக் கம்பனிகள் தங்கள் நிதிக்கூற்றுக்கள் இறுதி முடியடையாததால், CPC இன் நிதிக்கூற்றுக்கள் சட்டரீதியான தேவைகளுக்கு இணங்க, கிடைக்கக்கூடிய சிறந்த தகவல்களின் (வரைவு நிதி அறிக்கைகள்) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. CPSTL ஆனது 28.02.2021 ஆம் திகதிக்கு பின்னர் இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரித்துள்ளதால், கிடைக்கப் பெற்ற வரைவு நிதிக்கூற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, அதற்கேற்ப வேறுபாடுகள் அதிகரித்துள்ளன. | இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் சரி செய்ய எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் சரியான புள்ளிவிவரங்கள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iii) 2021 யூலை 22 ஆம் திகதியிட்ட சபை தீர்மான இல. 02/1552 இன் படி, சர்ச்சைக்குரிய நிலுவையில் உள்ள கடன் வட்டியான ரூபா.637.04 மில்லியனை CPSTL இற்கு செலுத்துவதற்கும், 5 சதவீத செயல்திறன் கட்டணங்களைத் ஒதுக்கி வைப்பதற்கும் சபையிடம் அனுமதி பெறப்பட்டிருந்தன. இது அண்ணளவாக ரூபா..1,226.38 மில்லியன், சமமான பவுசர் கட்டணங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நகல் எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுகளில் சீர்செய்யப்பட்டிருக்கவுமில்லை அல்லது வெளிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. | | இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் சரி செய்ய எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் சரியான புள்ளிவிவரங்கள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

(ஆ) **மண்ணெண்ணெய் மானியம்**

2015 நவம்பர் 24 ஆம் திகதியிட்ட FP/06/100/02/2016 இலக்க கடிதங்களில் மற்றும் 04/12/2014 ஆம் திகதியிட்ட எண். TTIP/1/83(1)T. இலக்க கடிதம் பொது திறைசேரியின் செயலாளரினால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு இணங்க, அரசு மானியமாக, ஏதேனும் விலைக் குறைப்பினால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்வதற்கான ஒப்பந்தத்துடன், அரசு முடிவு செய்த விலையில், கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெய் விற்பனை செய்கின்றது. இருப்பினும், 2014 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில் திரும்பப் பெறக்கூடிய மொத்த மானியத் தொகை ரூ. 39,587 மில்லியன், மீளாய்வாண்டில் இறுதியில் பொது திறைசேரி ரூபா.4,459 மில்லியன் மட்டுமே மீளச்செலுத்தியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் பெறப்பட வேண்டிய மானியத்தொகை ரூபா. 35,129 மில்லியன். இதில் ரூபா.5,097.72 மில்லியன் மட்டுமே கணக்கிடப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய மானியம் ரூபா. 30,031 மில்லியன் குறைவடைந்து காணப்பட்டது அதேவேளை வருமானம் ரூபா.2,122 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

முன்னைய ஆண்டுகளில் (2017 ஆம் ஆண்டிலிருந்து) ரூபா.27,909 மில்லியன் காணப்பட்டது. மேலும், அந்த வருமானததின் மீதான அனைத்து நேரடி மற்றும் மறைமுக வரிகளும் கணக்கிடப்பட்டு செலுத்தப்படவில்லை.

CPC அரசு நிர்ணயித்த விலையில் மண்ணெண்ணெய் வழங்குகிறது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் மீனவ சமூகத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் மண்ணெண்ணெய் விலையை அவ்வப்போது குறைத்தது மற்றும் அரசாங்கம் தீர்மானித்த குறைந்த விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதால் CPC இற்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. அதன்படி, அரசினால் ரூபா.4,459 மில்லியன கலால் வரிக்கு எதிராக பதிவழித்து மீள்நிரப்பட்டது. பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில், CPC 2014, 2015 மற்றும் 2016 இற்கான மண்ணெண்ணெய் மானியத்தை அங்கீகரித்தது. இருப்பினும், மேற்கூறிய ரூபா.4,459 மில்லியன் மீளச் செலுத்திய பின்னர் அரசினால் மீளதிருப்பிச்செலுத்தப்படவில்லை. மேலும், அரசு (பொதுத் திறைசேரி) மண்ணெண்ணெய் மானியத்தை திருப்பிச் செலுத்துவதை உறுதிப்படுத்தவில்லை. அதன்படி, 2017 முதல் நிதிக்கூற்றில் மண்ணெண்ணெய் மானியத்தை CPC அங்கீகரிக்கப்படவில்லை. மானிய வருவாயை அங்கீகரிப்பது இலாபம்/வருமானத்திற்கான கூடுதல் வரிச் செலவுகளைச் செலுத்த வழிவகுக்கலாம். இருப்பினும், நிலுவைகளை மீட்பதற்கான தொடர்ச்சியான பின்தொடர்தல்கள் செயல்பாட்டில் உள்ளன.

திரும்பப் பெறப்படாத அனைத்து மானியங்களையும் திரும்பப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் அதற்கேற்ப கணக்குவைக்கப்பட வேண்டும். வரிச்சட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளும் பொருந்தக்கூடியவை.

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | ஒவ்வொரு கடனுக்கான வட்டியையும் தனித்தனியாகக் கணிப்பிடுவது குறித்த விபரங்கள் காணப்படாமையால், மீளாய்வாண்டில் வெளிநாட்டு நாணயக் கடனுக்கான வட்டிச் செலவின் துல்லியமாக மற்றும் முழுமையை கணக்காய்வினால் திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை. கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கீடுகளின்படி, மீளாய்வுவாண்டிற்கான நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள வட்டி செலவினங்களுடன் ஒப்பிடுகையில் ரூபா.948.9 மில்லியன் வேறுபாடுகள் காணப்பட்டன. மேலும், கூட்டுத்தாபனத்தின கடன் தீர்ப்பனவு பெறுமதிகள் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தொகைகளுக்கும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட மாற்று விகிதங்களின் அடிப்படையில் கணக்காய்வு செய்யப்பட்ட கணிப்பீட்டுகளுக்கும் இடையில் வேறுபாடுகளில் ரூபா. 92.6 மில்லியன் காணப்பட்டது. மேலும், ஒவ்வொரு கடனுக்கான பதிவேடுகளையும், கூட்டுத்தாபனத்தால் அதாவது நிலுவையில் உள்ள மூலதனம், வட்டிக் கணிப்பீட்டு விபரம், ஒப்பந்தங்கள் உள்ளிட்ட கடன் ஆவணங்கள் போன்றவை சரியாக புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக 07 சபை ஆவணங்கள் மற்றும் சபைக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது அறவிடப்படும் கட்டணத்திற்கு மேலதிகமாக மாதாந்தம் பயன்படுத்தப்பட்ட கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான அமைச்சரவை அனுமதியோ அல்லது சபை தீர்மானமோ காணப்படவில்லை. எனவே, அத்தகைய கட்டணம் வசூலிக்க எந்த சட்ட அடிப்படையும் காணப்படவில்லை. மேலும், MUF ஆக வசூலிக்கப்படும் என்று கருதப்படும் கட்டணங்களுக்கு கூட்டுத்தாபனத்தினால் பற்றுச்சீட்டுக்களாக கணக்கிடப்படவில்லை மற்றும் 2019 வரை இது தொடர்பாக எங்களுக்கு எந்த கணக்காய்வு விசாரணையும் அனுப்பப்படவில்லை, மேலும் மேற்கூறிய கட்டணங்களுக்கு கணக்கீடு செய்ய சாத்தியமில்லை. நடைமுறையில் செயல்படுத்த அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு கடன் தொடர்பான பதிவேடுகளும், அதாவது, நிலுவையில் உள்ள மூலதனம், விபரமான வட்டி கணக்கீடு, ஒப்பந்தங்கள் உள்ளிட்ட கடன் ஆவணங்கள் போன்றவை முறையாக பராமரிக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (MUF)**<br><br>2013 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிய 38/1140 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி, 2014 சனவரி 01ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான எல்லா வணிக விற்பனையாளர் செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் (CODO) மற்றும் திறைசேரிக்குச் உரிமையான எல்லா விற்பனை செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிடமிருந்தும் (TODO) மாதாந்த பயன்பாட்டு கட்டணத்தை | இது தொடர்பான தனது கருத்தை கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மீளப்பெற்ற னொண்டார். “ 2021 திசெம்பர் 29 ஆம் திகதியிட்ட 95ஆவது கணக்காய்வு மற்றும் முபாமைத்துவக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபடி, அந்தக் கடிதத்தில் சில முக்கியமான தகவல்கள் வெளிப்படுத்தப்படாமையானது வருத்தமளிக்கிறது’’ என்று கூறினார். மேலும், கணக்காய்வு விசாரணைக்கான பதில் பதிவேற்றப்பட்டு அமைச்சு மட்டத்தில் வரிசை அமைச்சின் | பொறுப்பான தரப்பினரிடமிருந்து வருமான இழப்பை வசூலிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், சபையின் தீர்மானங்களை தாமதமின்றி அமுல்படுத்த வேண்டும். |

(MUF) அறவிடுவதற்கு சபையானது அனுமதி அளித்திருக்கிறது. எவ்வாறிருப்பினும், இத் தீர்மானமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதோடு 248 விற்பனை நிலையங்களுள் 11 நிலையங்களிடமிருந்து மாத்திரமே மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்பட்டது. அதன்படி 2014 முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனமானது அண்ணளவாக ரூபா 2,300 மில்லியன் கூட்டுமொத்த வருமான நட்டத்திற்கு உள்ளாகியது. இவ்விடயமானது எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்ட போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட இரு பிரிவுகளிலும் உள்ள எல்லா விற்பனையாளர்களிடமிருந்தும் மாதாந்தப் பயன்பாட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் வினைத்திறனான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இது தொடர்பாக மீளாய்வின் கீழ் உள்ள இவ்வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

சிரேஸ்ட உள்ளக கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையின் முடிவில் அனுப்பப்படும் என்று கூறப்பட்டது.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| உருப்படி | நிதிக்கூற்றின் படி | தொடர்புடைய பதிவேட்டின் படி | வேறுபாடுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ) ஐஆர்டி இற்கு சலுத்தப்பட வேண்டிய மீதிகள் | | | | பொது திறைசரியால் அங்கீகரிக்கப்பட்ட படி, நிகழாண்டு 2016/17 தொடர்பான வருமான வரிப் பொறுப்பை CPC இற்கு சமமான 36 தவணை அடிப்படையில் தீர்த்தது. திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்கள அமைப்பு தவணை | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் (ஐஆர்டி) இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட |
| (i) என்ரிவி | 3,242.5 | 560.8 | 2,681.7 | | |
| (ii) வருமான வரி | 351.6 | 9,272.3 | 8,920.7 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அடிப்படையில் தீர்வைத் தாமதமாக செலுத்தியதன் மூலம் அபராதங்களை வசூலித்துள்ளது. அதனால் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. | வேண்டும். |
| (ஆ) PAYE வரி | 0.1 | 46.9 | 46.8 | தனிப்பட்ட உத்தியோகத்தரின் கோரிக்கையைப் பெற்ற பிறகு செலுத்த வேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகைகள் தீர்க்கப்படும். அத்தகைய எதிர்கால உரிமை கோரல்களுக்கான ஏற்பாடாக நிதிக்கூறறில் சில நிலுவைகள் தக்கவைக்கப்படுகின்றன. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் (ஐஆர்டி) இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) பெறப்பட வேண்டியவை | 1.6 | (.5) | 2.1 | வாடிக்கையாளர்கள் உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெறும் திகதியில் நிலுவைகளை உறுதிப்படுத்தினர். பின்னர் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் எந்த சர்ச்சையும் இல்லாமல் செலுத்தப்படுகிறது. தற்போது வாடிக்கையாளர்களுக்கு எந்த பிரச்சனையுமில்லை. | வாடிக்கையாளர்களுடன் இணக்கம் செய்யப்படாத அனைத்து நிலுவைகளையும் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.. |

### 1.5.4 துணைக்கம்பனியின் நிதிகூற்று மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வு வருடத்திற்கான துணைக் கம்பனிகளின் CPSTLஇன் நிதிக்கூற்றுக்கள், மீதான முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தில் பின்வரும் விடயங்கள் காரணமாக கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் தொடர்புபட்ட நிலுவைகள்/ கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றுடன் ஓர் இணக்கமின்மையை ஏற்படுத்தும், மேலும், 01 யூன் 2019 முதல் 31 திசெம்பர் 2020 வரையிலான காலப்பகுதியில் CPC இலிருந்து நகல் போக்குவரத்துக் கட்டணங்களை அறவிடுவது அதிகரித்தமை/குறைவடைந்தமை தொடர்பான நிச்சயமற்ற தன்மையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.5.2(அ) தொடர்பாக விடயத்தின் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | எல்கேஎஸ் 16 இன் பிரகாரம், கம்பனியினால் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட 15,148 சொத்துக்களின் அண்ணளவான கிரயமான ரூபா. 7,727.6 மில்லியனான அந்த சொத்துக்களின் ஆயுட்காலம் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படாமல் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றது. மேலும், 2003 ஆம் ஆண்டு கம்பனி தொடங்கப்பட்டதிலிருந்து அதன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கான சரியான கொள்கை கம்பனியினால் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | 2003 ஆம் ஆண்டு சிபிஎஸ்ரிஎல் (CPSTL) சொத்துக்களினை ஆரம்ப மதிப்பீட்டின் செய்ததிலிருந்து, கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல பிரதான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், கடல் எண்ணெய் வசதிகள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள 11 மொத்தக் குதங்கள் ஆகியவற்றிலுள்ள சொத்துக்களுக்கு அதிக செலவு, அதிக அளவு தொழில்துறையின் பிரச்சினைகள் காரணமாக கம்பனிக்கு சொந்தமான தொடர்புடைய சொத்துக்களில் எந்தவொரு மதிப்பீடும் மேற்கொள்ளப்படவில்லை. 2021 ஆகஸ்ட் 11 ஆம் திகதியில் நடைபெற்ற கூட்டத்தில (BP இல. 07/214) கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல பிரதான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், கடல் எண்ணெய் வசதிகள் மற்றும் நாடளாவிய 11 மொத்தக் குதங்களிலுள்ள CPSTL ஆதனம், பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2022 இன் போது இப் பணியை நிறைவேற்றவும், நிலையான சொத்துக்களை மீள்மதிப்பிடுவதற்கு அதன் சந்தை நிலைமைகளுக்கு கொண்டு வருவதற்கு முகாமைத்தும் திட்டமிட்டுள்ளது. | கம்பனி நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |
| (ii) | எஸ்எல்எப்ஆர்எஸ் (SLFRS)16 இன் 47 ஆவது பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டில் குத்தகைப் பொறுப்புதொடர்புகள் | ஒப்பந்த முடிவில் சிபிஎஸ்ரிஎல் (CPSTL) இற்கு உரிமையினை மாற்றுவதற்கு மற்றும் மோட்டர் வாகன குத்தகைக்கு | கம்பனி நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 2017 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 6 மோட்டார் வாகனங்கள் தொடர்பான சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை கம்பனி அங்கீகரிக்கவுமில்லை. | எந்தவிதமான குத்தகை கம்பனியுடனும் ஒப்பந்த உடன்படிக்கையில் சிபிஎஸ்ரிஎல் (CPSTL) ஈடுபட்டிருக்கவில்லை. தொழிற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் 06 மோட்டர் வாகனங்கள் எம்/எஸ் ராஜகிரிய டுவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டிடம் இருந்து வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தன. இவ் வாகனங்களின் உரிமை ஒப்பந்த காலத்தின் முடிவில் கம்பனிக்கு மாற்றப்படலாகாது. | |
| (iii) | மீளாய்வாண்டில் கம்பனியின் நிதிநிலமைக்கூற்று குறிப்புக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டின தவறாக பதிவு செய்யப்பட்ட குழாய் வழி வருமானம் மற்றும் வட்டி வருமானம் முறையே சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.. எவ்வாறாயினும், எல்கேஏஎஸ் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம், CPC மற்றும் LIOC ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் வட்டி மூலங்களை அதிகமாக வசூலித்ததில் ஏற்பட்ட தவறு ரூபா. 579,805,642 (VAT மற்றும் NBT உட்பட), மற்றும் குழாய் வழி வருமானம் ரூபா. 100,220,058, 2019 க்கு முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடையது உரிமை மாற்றல் கூற்றின் ஒட்டுமொத்த விளைவுகளை சீர்செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுத் தகவலின் கீழ் ”பதிவளிப்பு செலவு’’ ஆனது காட்டப்பட்டிருந்தன. | எல்கேஏஎஸ் 08 இன் 43 ஆம் பந்தியின் பிரகாரம்,தவறுகளின் ஒட்டு மொத்தமான விளைவு அல்லது குறிப்பிட்ட காலத்தின் விளைவைக் கண்டறிவது சாத்தியமில்லாத அளவிற்குத் தவிர, பின்னோக்கி மீள்பரிசீலனை மூலம் முன்னைய காலப்பகுதியின் தவறுகளை திருத்தம் செய்யப்பட வேண்டும். மற்றும் எல்கேஏஎஸ் 08 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், அனைத்து முன்னைய காலகட்டங்களுக்கும் ஒரு பிழையான தொகையினை தீர்மானிப்பதற்கு சாத்தியமில்லாத போது (உ-ம்: கணக்கியல் கொள்கையைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட தவறு), கம்பனி 45 ஆம் பந்திக்கு இணங்க, ஒப்பீட்டுத் தகவலை முன்னைய திகதியிலிருந்து மீள்பரிசீலனை செய்கின்றது. எனவே அத் திகதிக்கு முனனர் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் ஒட்டுமொத்த மீள்பரிசீலனையின் பகுதியை அது புறக்கணிக்கின்றது. பந்திகள் 50-53 இல் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்னைய காலங்ககளுக்கான பிழையை சரிசெய்வது எப்போதும் சாத்தியமற்றது என்பதற்கான வழிகாட்டுதலை | கம்பனி நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |

வழங்குகின்றது. மேலே உள்ள இரண்டு காட்சிகளின் அடிப்படையில். குறிப்பிட்ட கால விளைவுகள் அல்லது பிழையின் ஒட்டுமொத்த விளைவை நிர்ணயிப்பது சாத்தியமற்றதாக இருந்தால், பந்தி 45 இன் படி, கம்பனியின் ஒப்பீட்டுத் தகவலை நடைமுறைப்படுத்தக்கூடிய முன்னைய திகதியிலிருந்து மீள்பரிசீலனை செய்யப்படுகின்றது. மேலும், அத் திகதிக்கு முன்னர் ஏற்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமையாண்மையின் ஒட்டுமொத்த மீள்பரிசீலனையின் பகுதியைப் புறக்கணிக்கிறது. மேலே விவரிக்கப்பட்டுள்ளதன் படி, எல்கேஏஎஸ் 08 இன் 43 முதல் 48 வரையான பந்திகளுக்கு இணங்க முன்னைய ஆண்டு ”பதிவழிப்பு செலவுகள்” காணப்படுகின்றன.

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட எரிபொருள் தொட்டியின் கட்டுமானம் தொடர்பான பிடிப்பணம் ரூபா.31,446,395 தொகையானது எரிபொருள் தாங்கிகளின் கிரயத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதன் விளைவாக, எரிபொருள் தொட்டிகளின் பெறுமதி அத்தொகையால் குறைவடைந்து காணப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் பெறுமானத் தேய்மானவின் பெறுமதி கூட குறைவடைந்து காணப்படுகின்றது. மேலும், மீளதய்வாண்டில் திரண்ட பெறுமானத்தேய்வு குறைவாக காணப்பட்டதன் விளைவாக தேறிய சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காணப்படுகின்றது. | வரைவு நிதியில் அனைத்து உள்ளீடுகளும் உட்பொதிக்கப்பட்டிருப்பதனை உறுதிசெய்ய உள்ளகக் கட்டுப்பாடுகள் இருந்தாலும். அதிக அளவிலான கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக, நிதிககூற்றினை போது, நிதியினால் கவனக்குறைவாகக் அவதானிக்கப்படாமல் போனது. இருப்பினும், நிதியாண்டு 2020 இல் இவை பின்னர் சீர்செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வருடாந்த நிதிக்கூற்றினை தயாரிக்கும் போது அனைத்து பொறுப்புகளும் சரியாகக் கணக்கிடப்படும் என்பதை உறுதிசெய்ய முகாமை மற்றும் நிதிக் குழு | தொடர்புபட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அனைத்து சொத்துகளும் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒவ்வொரு நடவடிக்கையும் மேற்கொள்ளும். | |
| (ii) | அதிகமாக வசூலிக்கப்பட்ட குழாய் வழி வருமானம் ரூபா. 26,789,209 முன்னையாண்டுடன் தொடபுடைய தொகை தவறுதலாக மீளாய்வாண்டில் மேலதிக கட்டணம் குழாய்வழி வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் அத் தொகையினால் இலாபம் குறைவாக காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் (2019) அதிக கட்டணம் வசூலிக்கப்பட்ட குழாய்வழி வருமானம் ரூபா. 103,920,895 முன்னைய ஆண்டில் பதிவளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன், அவ் ஆண்டிற்கான (2019) உண்மையான மேலதிக கட்டணம் வசூலிக்கப்பட்ட குழாய்வழி வருமானம் ரூபா. 30,490,045. இதன் விளைவாக, முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 73,430,849 தொகையினால் குறைவடைந்து காணப்பட்டிருந்தன. | எல்கேஏஎஸ் 08 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், அனைத்து முன்னைய காலகட்டங்களுக்கும் ஒரு பிழையான தொகையினை தீர்மானிப்பதற்கு சாத்தியமில்லாத போது (உ-ம்: கணக்கியல் கொள்கையைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட தவறு), கம்பனி 45 ஆம் பந்திக்கு இணங்க, ஒப்பீட்டுத் தகவலை முன்னைய திகதியிலிருந்து மீள்பரிசீலனை செய்கின்றது. எனவே அத் திகதிக்கு முனனர் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் ஒட்டுமொத்த மீள்பரிசீலனையின் பகுதியை அது புறக்கணிக்கின்றது. பந்திகள் 50-53 இல் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்னைய காலங்ககளுக்கான பிழையை சரிசெய்வது எப்போதும் சாத்தியமற்றது என்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகின்றது. | தொடர்புபட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அனைத்து சொத்துகளும் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் நீண்ட கால செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூபா. 59,510,180 ஆனது பதிவளிப்பு செய்யப்பட்ட மேலதிக கட்டணமாக வசூலிக்கப்பட்ட குழாய்வழி வருமானத்திற்கு எதிராக தவறுதலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் அதே தொகையினால் ஏனைய தொழிற்பாட்டு செலவினங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | சிறந்த விளக்கக்காட்சிக்காக இரண்டு தனித்தனி வரிசை உருப்படிகளைக் காட்டாமல் நிதிக்கூற்றில் பதிவளிப்பு/ பதிவேற்ற மீதான தேறிய விளைவு சீர்செய்யப்பட்டிருந்தன. இது நிதிக்கூற்றுக்களின் வாசகர்களை தவறாக வழிநடத்தாது மற்றும் எல்கேஏஎஸ் 01 இற்கு இணங்குகின்றது. | தொடர்புபட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அனைத்து சொத்துகளும் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கம்பனியின் நிதிக்கூற்றின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்குகளின் மீதி ரூபா. 338,378,355. எவ்வாறாயினும், இலங்கை வங்கியினால் வழங்கிய மீதி உறுதிப்படுத்தலின் அடிப்படையில் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் மீதி ரூபா. 410,613,825. அதன்படி, விளக்கமற்ற வேறுபாடுகள் ரூபா. 72,235,470 இவ் இரண்டு தொகைகளுக்குமிடையில் அவதானிக்கப்பட்டன. மேலும், இலங்கை வங்கியில் USD இலான சேமிப்புக் கணக்கு பல ஆண்டுகளுக்கு மேலாக எந்தவிதமான மாற்றங்களுமின்றி தொடர்ச்சியாக காணப்படுகின்றன. | 2020 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, மேற்பார்வையின் காரணமாக USD நாணயமாற்றங்கள் விகிதம் ரூபா.157.56 இற்கு பதிலாக ரூபா.191.196 பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் குழு மற்றும் உள்ளகக் கணக்காய்வின் மீளாய்வில் வரைவு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கவனக்குறைவாகப் புறக்கணிக்கப்பட்டது. | பதிவேட்டிலிருந்து விடுபட்ட அனைத்து மீதிகள் பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட நிதிக்கூற்றின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு (ஐஆர்டி) செலுத்த வேண்டிய வருமான வரித் தொகை ரூபா. 383,213,359. அத்தகைய வருமான வரி செலுத்த வேண்டிய நிலுவைகளின் உள்ளடக்கங்கள் தொடர்பான விவரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஐஆர்டியிடம் இருந்து பெறப்பட்ட நிலுவை உறுதிப்படுத்தலின்படி, ஐஆர்டிக்கு செலுத்த வேண்டிய தேறிய தொகை ரூபா. 541,461,671. அதன்படி, இணக்கம் செய்யப்படாத ரூபா. 158,248,312 அவ் இரண்டு மீதிகளுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (ஐஆர்டி) கணினிமயமாக்கப்பட்ட தரவுத்தள முறைமையிலுள்ள மீதிகளை CPSTL இன் பொது பேரேட்டு மீதியுடன் ஒப்பிடும் போது, தரவு உள்ளீடு தவறுகள், சுய மதிப்பீட்டு அறிவிப்புகள்/ வரி செலுத்துதல்கள்/ புதுப்பிப்பதில் தாமதம் ஆகியவற்றின் காரணமாக இந்த வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுகிறோம். இறுதி வரி அறிக்கைகள் மற்றும் ஐஆர்டி முறைமையில் முன்னைய ஆண்டுகளில் | ஐஆர்டியுடன் அந்த வித்தியாசங்களை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகரிக்கப்பட்ட வரி மதிப்பீடுகளை உள்ளடக்கியிருக்கலாம், அவை மேல்முறையீட்டு செயல்முறையின் காரணமாக தீர்க்கப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. மேலும், பேரேட்டு நிலுவைகளுடன் ஐஆர்டி நிலுவைகளுக்கு இடையே இணக்கம் செய்து தயாரிப்பதன் நோக்கத்திற்காக, ஐஆர்டி இலிருந்து வரிவான விபரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் இற்றைவரை தாமதமாகவே காணப்படுகின்றன. | |
| (ii) | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றின் படி வருமான வரிச் செலவுகளுக்கான ஒதுக்கீடு ரூபா. 1,045,291,808 அதேபோன்று, அவ் ஆண்டுக்கான உண்மையான வரி கொடுப்பனவு ரூபா.1,005,993,161. முன்னைய ஆண்டிற்கான வருமான வரிக்கான கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா.39,298,647 பெறுமதியானது மீளாய்வாண்டில் சீர்செய்யப்பட்டிருக்க வேண்டும், இவ் ஆண்டில் சரிசெய்யப்பட்ட தொகை ரூபா.36,441,226. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் வருமான வரி ஒதுக்கீட்டின் சரிசெய்யப்படாத வேறுபாடு ரூபா. 2,857,421 ஆன தொகை அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் அதிகளவான ஒதுக்கீடுகள் ஒப்பந்தத்தின் படி ரூபா.2,857,421 சரிசெய்யப்பட வேண்டும். | பிரச்சினைகளை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள தொகை ரூபா.66,931,834இனால் வேறுபாட்டிருந்தது மற்றும் ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களின் (இலவச கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள்) தேறிய புத்தக பெறுமதி (NBV), மூலதன கொடுப்பனவுகளுக்கு உரிமை இல்லாத கணக்குகளில் | புதிய பிற்சோக்கை வரி பொறுப்பு ரூபா.16,063,640 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தன மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதிக் குழுவின் கவனக்குறைவினால் தவறிவிட்டது. இது தொடர்ந்துவரும் ஆண்டில் | பிரச்சினைகளை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்தன. | சரிசெய்யப்படும். | |
| (iv) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றின் படி, மீளாய்வாண்டில் IRD இற்கு செலுத்த வேண்டிய VAT தொகை ரூபா.53,278,154 ஆக காணப்படுகின்றது. இருப்பினும், ஐஆர்டி பதிவுகளின்படி, ஐஆர்டிக்கு தேறிய பெற வேண்டிய தொகை (பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய) ரூபா.138,747,556 ஆக காணப்படுகின்றது. அதன்படி, அந்த இரண்டு நிலுவைகளுக்கு இடையில் வேறுபாடு ரூபா.85,469,402 ஆனது இணங்கம் செய்யப்படாது காணப்படுகின்றது. | 31 திசெம்பர் 2020 ஆம் ஆண்டின நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி (VAT) தொகையானது 20 சனவரி 2021 ஆம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தப்பட வேண்ட வேண்டிய காரணத்தினால் 2020 திசெம்பரில் VAT பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. மேலும், IRD இடம் ரூபா.138,747,556 தொகைக்கான விரிவான விபரங்கள் அதிகாரபூர்வமாக கோரப்பட்டிருந்தும் IRD இனால் பதில் வழங்கப்பட்டிராத காரணத்தினால் IRD மீதிக்கும் பேரேட்டு மீதிக்குமிடையில் இணக்ககக்கூற்று தயாரிக்கப்பதற்று சாத்தியமற்றதாகவே காணப்பட்டது. | ஐஆர்டியுடன் அந்த வித்தியாசங்களை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | கம்பனியின் பதிவுகளின் படி, 01 ஒக்டோபர் முதல் 31 திசெம்பர் 2020 வரையிலான காலப்பகுதியில் வருமானம் ரூபா.3,140,630,614 ஆகும். இருப்பினும், IRD க்கு சமர்ப்பிக்கப்பட்ட VAT அறிக்கையின்படி, VAT கணிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்பட்ட வருமானத் தொகை ரூபா. 3,120,446,154 மட்டுமேயாகும். எனவே, அவ் இரண்டு பதிவுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் ரூபா. 20,184,460 தொகையானது இணக்கம் செய்யபடாமையானது அவதானிக்கப்பட்டது. | 31 திசெம்பர் 2020 இல் முடிவடைந்த காலாண்டிற்கான VAT வருமானத்தில் VAT பொறுப்பு விறபனைப் பெறுமதியில் தவறுதலாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போது VAT பொறுப்பில் எந்தவித மாற்றமுமில்லை. அதன்படி VAT வருமான வரியில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | பிரச்சினைகளை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | மீளாய்வாண்டின் இறுதியில் IRD இலிருந்து பெறப்பட்ட மீதி உறுதிப்பாட்டின் படி, IRD இற்கு செலுத்த வேண்டிய PAYE நிலுவைத் தொகை ரூபா. 109,449,724 ஆகும். மீளாய்வாண்டில் கம்பனியின் நிதிக்கூற்றின்படி IRD இற்கு செலுத்தப்பட வேண்டிய PAYE நிலுவைகள் எதுவும் காணப்படவில்லை. அதன்படி, அவ் இரண்டு பதிவுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் ரூபா. 109,449,724 தொகையானது இணக்கம் செய்யபடாமையானது அவதானிக்கப்பட்டது. | 31 திசெம்பர் 2020 இல் பதிவேட்டின்படி PAYE இல் எந்தப் பொறுப்பும் நிலுவையிலில்லை. கம்பனி சனவரி, 2020 சட்ட மாற்றத்துடன் ஊழியர்களின் சார்பாக செலுத்தும் வரி செலுத்துவதை நிறுத்திவிட்டது. மேலும், பேரேட்டு நிலுவைகளுடன் ஐஆர்டி நிலுவைகளுக்கு இடையே இணக்கக்கூற்றினைத் தயாரிப்பதற்கு ஐஆர்டி இலிருந்து விரிவான விபரங்கள் கோரப்படடிருந்தும் இற்றைவரை தகவல்கள் வழங்கப்படவில்லை. | ஐஆர்டியுடன் அந்த வித்தியாசங்களை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | மீளாய்வாண்டில் கம்பனியின் நிதிக்கூற்றின் பிரகாரம், ரூபா.24,838,931 பெறுமதியானது ஆண்டிறுதியில் ஐஆர்டியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொகையாகும். ஐஆர்டியிடம் இருந்து பெறப்பட்ட நிலுவை உறுதிப்படுத்தலின்படி ஐஆர்டிக்கு செலுத்த வேண்டிய WHT தொகை ரூபா.31,499,999 ஆகும். அதன்படி, அவ் இரண்டு பதிவுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் ரூபா. 56,338,930 தொகையானது இணக்கம் செய்யபடாமையானது அவதானிக்கப்பட்டது. | கம்பனிக்கு வட்டி செலுத்தப்பட்டது மற்றும் விசேட கட்டணங்கள் WHT முகவரியால் கழிப்பட்டமையானது நிதிக்கூற்றில் பெறத்தக்க WHT வரித்தொகையுடன் காட்டப்பட்டிருந்தது, வருமானவரி திரும்பல் சமர்ப்பிக்கப்படும் போது செலுத்தப்பட வேண்டிய வருமானவரிக்கு எதிராக வரிச் சலுகை பெற்றுக்ககொள்ளலாம். ஐஆர்டி பதிவின்படி செலுத்த வேண்டிய WHT தொகை ரூபா.31,499,999 ஆனது 28.03.2019 ஆம் திகதியில் செலுத்தப்பட்டது (காசோலை இல. 069094) மற்றும் கணினியைப் புதுப்பிக்கும் போது IRD தரவு உள்ளீட்டில் தவறு ஏற்பட்டது. மேற்கூறிய தவறை சரிசெய்ய ஐஆர்டிக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | |

**(ஈ) பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஏனைய பெறப்பட வேண்டிய தொகை ரூபா. 7.2 மில்லியன் நிலுவை 05 வருடங்களுக்கு மேலாக அறவிட்டுக் கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், அறவீட்டுக்கொள்ளப்படாத நிலுவைகள் தொடர்பாக குறித்த உறுதிப்படுதல்கள் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 2010 ஆம் ஆண்டில் பெரும்பாலான மீதிகள் முதலிருந்து SAP ERP அமுல்படுத்தப்பட்டு முன்கொண்டு செல்லப்பட்டது. கணக்காய்வு முகாமைத்துவ குழு பணிப்பாளர் சபையின் முன் அனுமதியுடன் பெறத்தக்க இந்த நீண்ட நிலுவைத் தொகையை பதிவழிப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டது. | நீண்ட காலம் பெறப்பட வேண்டிய நிலுவைகளை மீதிகளை அறவீட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**(உ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 2,675,710 தொகையானது 07 வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளின் வரவு நிலுவையாக காணப்படுகின்றது. இதில் 2 வரவு நிலுவையின் மொத்தத நிலுவை ரூபா. 178,610 ஆனது 05 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்படுகின்றது. மேலும், 05 வரவு மீதிகளின் மொத்த நிலுவை ரூபா. 2,497,100ஆனது 1 தொடக்கம் 05 வருடங்களாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கம்பனி விற்பனையாளர்களுடன் சில கொடுக்கல்வாங்கல்களின் பற்று நிலுவைகளை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, கணக்காய்வில் அந்த வரவு மீதிகள் தொடர்பான நம்பகத்தன்மை மற்றும் | தீர்வு செய்யப்படாத மீதிகள் SAP (MIRO) இனால் சரிபார்ப்பதற்கு தவறான விலைப்பட்டியல்களை மாற்றியமையின் காரணமாக பெரும்பாலான வரவு மீதிகள விற்பனையாளர் கணக்குகளில் பிரதிபலிக்கப்படுகின்றன. | அனைத்து இணக்க நிலுவைகளையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தல் தொடர்பான ஐயவினாக்கள் காணப்படுகின்றன. | | |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் 40 செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 56,566,358 நிலுவையாக 01 வருடம் தொடக்கம் 05 வருடங்களாக காணப்படுகின்றன மற்றும் 21 செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 15,748,981 நிலுவைகள் 05 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்படுகின்றது. எவ்வாறாயினும், சிபிஎஸ்டிஎல் (CPSTL) முகாமைத்துவ அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன்படி, அந்த நிலைத்திருக்கும் மற்றும் உண்மைத் தன்மையான நிலுவை சந்தேகத்திற்குரியதாக காணப்படுகின்றது. | செலுத்தப்பட வேண்டிய நீண்ட கால நிலுவைகளில் சில விற்பனையாளர் பொறுப்புக்கள் கம்பனியினால் இனி செலுத்த வேண்டிய தேவையில்லை.<br><br>இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS 9), அல்லது IFRS-9, செலுத்த வேண்டிய எந்தவொரு கணக்கையும் பதிவளிப்பு செய்வதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பட்டியலை வரையறுத்து வழங்குகிறது. | அனைத்து இணக்க நிலுவைகளையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 08 ஏப்ரல் 2021 ஆம் திகதியில் 31/210 ஆம் இலக்க சபையின் தீர்மானத்தின் படி, மீளாய்வாண்டில் ரூபா. 59,510,180 பெறுமதியான சில நீண்டகாலம் செலுத்த வேண்டிய நிலுவை கம்பனியினால் செலுத்தப்பட ேண்டியிருந்தன. இருப்பினும், எழுத்துப்பூர்வ அடிப்படையில் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | இவ் எவழிகாட்டுதல்களின் படி, பணம் செலுத்துவதற்கான பொறுப்பு காலாவதியாகி விட்டால், ரத்து செய்யப்பட்டால் அல்லது விலக்களிக்கப்பட்டதன் போது மட்டுமே நிதிப் பொறுப்புகள் கம்பனியினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனவே, அவை காலவரையறையின் அடிப்படையில் பதிவளிக்கப்படவில்லை.<br><br>எனவே, ஒவ்வொரு விற்பனையாளர் கணக்குப் பொறுப்புக்கும் உரிய ஊக்கத்துடன் நிறைவேற்றிய பின்னர், கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் சிபார்சு மற்றும் பணிப்பாளர் சபையின் | அனைத்து இணக்க நிலுவைகளையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதி பெறப்பட்:டு இந் நிலுவைகள் மீண்டும் அறவிடப்பட்டன. | |

**(ஊ) தொடர்புள்ள தரப்பினர்கள் மற்றும் தொடர்புள்ள தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை**

---

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனியின் பதிவுகளின் படி, CPC இலிருந்து பெற வேண்டிய தொகையிலிருந்து மற்றும் மற்றும் CPC இற்கு செலுத்த வேண்டிய தொகைகள் முறையே ரூபா. 7,308.85 மில்லியன் மற்றும் ரூபா. 349.92 மில்லியன்களாகும். இருப்பினும், CPC ஆல் பராமரிக்கப்படும் பதிவேடுகளின்படி, கம்பனியிலிருந்து பெறப்பட வேண்டியதுடன் மற்றும் கம்பனியால் கொடுக்கப்பட வேண்டியதுடன் தொடர்புடைய தொகைகள் முறையே ரூபா.6,565.79 மில்லியன் மற்றும் ரூபா.600.75 மில்லியன்களாக காணப்படுகின்றது. அதன்படி, இணகங்காத தேறிய வேறுபாடு ரூபா. 993.89 மில்லியன், இதில் துணைக் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை மற்றும் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் முறையே ரூபா. 743.06 மில்லியன் மற்றும் ரூபா. 250.83 மில்லியன்கள் இரண்டு கம்பனிகளுக்கும் இடையே அவதானிக்கப்பட்டன.<br><br>எவ்வாறாயினும், CPSTLஇற்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூபா.637.04 மில்லியனான கடன் வட்டி நிலுவை சர்ச்சைக்குரிய கொடுப்பனவுகளாக 2021 யூலை 22 ஆம் திகதியில் CPC இனால் சபைத் தீர்மானமெடுக்கப்பட்டது. | கடன் வட்டியில் ரூபா.637,043,541 செலுத்தப்பட வேண்டிய தொகை பெறப்பட்டிருந்தது. அதற்காக சபையினால் அனுமதியினைப் பெறுவதற்கும், நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்குக் காத்திருப்பதற்கும CPC தேவையான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.<br><br>ரூபா. 53,548,548 கணக்கில் பதியப்படாத SAP பராமரிப்பு கட்டணம்.<br>அதற்காக சபையினால் அனுமதியினைப் பெறுவதற்கும், நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்குக் காத்திருப்பதற்கும் CPC தேவையான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.<br>ரூபா. 103,920,894 பைப்லைன் கட்டணங்கள்.<br>31 திசெம்பர் 2020 இல் CPC இலிருந்து பெறப்பட வேண்டிய தொகைகளை பதிவளிப்பு செய்வதற்கு CPSTL AMC அனுமதி மற்றும் CPSTL சபையின் அனுமதியினைப் பெறப்பட்டுள்ளது.<br>ரூபா. 156,389,459 மீதி தீர்க்கப்படாத நிலுவைகள்.<br>2021 ஆம் ஆண்டில் CPC உடன் நிலுவையில் உள்ள நிலுவைத் சர்ச்சைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இணங்காத நிலுவைகளை சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கம்பனிப் பதிவேடுகளின்படி, LIOC இலிருந்து பெறப்பட்ட தொகை ரூபா.655.64 மில்லியன், மற்றும் LIOC இலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் படி கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா.695.82 மில்லியன். அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டு நிறுவனங்களுக்கிடையே துணைக் கம்பனியின் நிலுவையாக ரூபா. 40.18 மில்லியன் அவதானிக்கப்பட்ட வேறுபாடுகள் இணக்கம் செய்யப்படவில்லை. | ரூபா. 43,458,458 கடன் வட்டி மீளப்பெறப்படும்.<br><br>எரிசக்தி அமைச்சின் செயலாளரின் வழங்கப்பட்ட வழிகாட்டுதலுககு இணங்க வரிகளுடன் ரூபா.37,057,076 தொகையானது பதிவழிப்பு செய்வதற்கு CPSTL இன் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தன.அதன் படி, 2020 திசெம்பர் 31 இல் LIOC இலிருந்து பெறப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா.43,458,458 ஆனது CPSTL இனால் பதிவழிப்பு செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் LIOC இன் மீள்சீராக்கவுள்ள ரூபா.3,308,922 நிலுவையாகவுள்ள தொகையானது சர்ச்சையாக காணப்படுகின்றது. | இணங்காத நிலுவைகளை சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 31 திசெம்பர் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே ரூபா.374.69 மில்லியன் மற்றும் ரூபா.70.87 மில்லியன் தொகைகள் கம்பனியின் நிதி நிலைமைக்கூற்றில்(குறிப்பு இல.19)இல் காட்டப்பட்டதுக்கும், CPC உடன் தொடர்புடைய தரப்பினர்களின் வெளிப்படுத்தல்களில் மற்றும் கம்பனியின் பொது பேரேட்டில் காட்டப்பட்டுள்ள தொகைகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. | குறிப்பிட்ட காலத்திற்கான நிலுவைகளுக்கு இடையில் எந்த வித்தியாசமும் காணப்படவில்லை. | இணங்காத நிலுவைகளை சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,371 மில்லியன் வரிக்கு பின்னரான இலாபம் மற்றும் ரூபா 20,562 மில்லியன் முழுமையாக உள்ளடக்கிய செலவிற்கும் பின்னர் கூட்டுதத்தாபனத்தின் செயற்பாடுகளானவை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 275,561 மில்லியன் எதிர்மறை நிகர சொத்து நிலையைக் கொண்டிருந்தது. பிரதானமாக அண்மைக் காலத்தில் இருந்த தொடர்ச்சியான நாணயமாற்று விகித வேறுபாடுகளின் எதிர்மறைத் தாக்கத்தின் காரணமாக இப் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. பொருத்தமற்ற விலையிடும் கொள்கை மற்றும் முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட இடர் குறைப்பு பரிமாற்றங்கள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட பாரிய நட்டத்தின் எதிர்மறைத் தாக்கங்கள் மேலும், கூட்டுத்தாபனத்தின் நிகர சொத்துக்களுக்கு தேய்மானத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு அரசாங்கத்தின் நிதி உதவி இல்லாமல் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்தியங்கும் தன்மையை கொண்டு நடத்துகின்ற இயலுமை சந்தேகத்திற்குரியது ஆகும். | CPC என்பது இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான பொது கூட்டுத்தாபனமாகும். முக்கிய பெடற்றோலியப் பொருட்களின் விலைகள் மொத்தச் செலவைக் காட்டிலும் குறைவாக அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுவதால், CPC வரலாற்று ரீதியாக இழப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. எனவே, CPC இற்கு ஏற்பட்ட திரட்டப்பட்ட நட்டம் எதிர்மறை தேறிய சொத்துக்களான ரூபா.275,561 மில்லியன் 31.12.2020 இல் காட்டியது. CPC மேற்கூறிய எதிர்மறை தேறிய சொத்துக்களுடன் செயல்பட்டாலும், நாட்டின் ஆற்றல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவளித்ததால், CPC தொடங்கியங்கும் அடிப்படையில் தொழிற்படுகின்றது. | கூட்டுத்தாபனத்தின் சமபங்கு நிலையை மேம்படுத்த முகாமை சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் |

### 1.5.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) எரிபொருள் முனையங்களில் உள்ள பெற்றோலியப் பொருட்களின் அளவு தாங்கிகளில் அளவிடப்படுகிறது மற்றும் 15°C அல்லது 60°F இல் உள்ள நிலையான வெப்பநிலையில் சமமான அளவுகளுக்கு மாற்றப்பட வேண்டும். வெப்பநிலையில் ஏற்ற இறக்கங்கள் எண்ணெய் பொருட்கள் விரிவடைவதற்கு அல்லது சுருங்குவதற்கு காரணமாகின்றன, இது அளவிடப்பட்ட அளவு மற்றும் அடர்த்தியில் மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது. சூடான மற்றும் குளிர்ந்த தொட்டிகளில் களஞ்சியப்படுத்துவது மிகவும் முக்கியமானது. தொட்டி அளவுத்திருத்தம் அல்லது தொட்டி அளவீட்டில் வெப்பநிலை விளைவை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறினால், அளவீட்டு நியாயமற்ற தன்மையை ஏற்படுத்தும், குறிப்பாக இறுதி இருப்பு மட்டம் மற்றும் உண்மையான தயாரிப்பு நட்டம்/ மிகையினை தீர்மானிக்கின்றது. எவ்வாறாயினும், புத்தகங்களில் உள்ள பெறுமதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த இறுதி இருப்பு சரிபார்ப்பை மேற்கொள்ளாமல், மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டன. இதன் விளைவாக, உண்மையான இறுதி இருப்பின் அளவு, பெறுமதி மற்றும் தயாரிப்பு நட்டம்/மிகை ஆகியவை மேலே கூறப்பட்டுள்ள உண்மையான சரக்கு அளவீட்டுடன் ஒப்பிடும்போது நிதிக்கூற்றில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும், சரக்கிருப்புக்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய சரக்கு எண்ணும் ஆவணங்கள் இல்லாத காரணத்தால், மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள இறுதி எரிபொருளின் இருப்பின் உண்மைத்தன்மை ஆகியவை கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | அந்தந்த செயல்பாட்டு ஊழியர்களால் மொத்த தயாரிப்புகளுக்காக ஒவ்வொரு இடத்திலும் பௌதீக சரிபார்ப்புகள் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் இந்தத் தரவுகள் தினமும் பதிவேற்றப்பட்டு இணக்கம் செய்யப்படுகின்றன. பின்னர், அளவு இணக்க இழப்பு அல்லது மிகை கணிப்பிட்டு தினமும் அசாதாரண இலாபம் அல்லது அசாதாரண நட்டம் தொழிற்பாட்டின் பின்னர் மற்றும் மாதாந்தம் இந்த தரவுகள் முறைமையில் பதிவு செய்யப்பட்டது. ஆண்டின் இறுதியில், மேலும் சரிபார்ப்பதற்காக ஒவ்வொரு இடத்திலும் இந்த பௌதீக சரிபார்ப்பிற்காக நிதி மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் பங்கேற்கின்றனர். கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தங்குமிட சிக்கல்கள், நிதி மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் டெர்மினல்கள் மற்றுமு் சுத்திகரிப்பு நிலையங்களில் பௌதீக சரிபார்ப்புக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளனர். அந்த நேரத்தில் இந்த இடங்களில் இருந்து கொவிட் நோயாளிகள் (பணியாளர்கள்) கண்டறியப்பட்டதால் இறுதியாக அது ரத்து செய்யப்பட்டது. ஆனால் நிதி மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பங்கேற்பு இல்லாமல் ஒவ்வொரு இடத்தின் செயல்பாட்டு ஊழியர்களால் பௌதீக சரிபார்ப்புகள் வழக்கம் போல் மேற்கொள்ளப்பட்டுள்ளன, மேலும் இந்த நிலைமை ஏற்கனவே கணக்காய்வு தலைமை அதிபதியினால் | கூட்டுத்தாபனத்தினால் மூலம் வருடாந்த பௌதீக சரக்கிருப்பு சரிபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அதற்கேற்ப கணக்கு வைக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மொத்த தயாரிப்புகள் பெறும்போது (இறக்குமதி மற்றும் சுத்திகரிப்பு உற்பத்தி) கணக்கிடப்படும். இயற்கை வெப்பநிலை மற்றும் அடர்த்தி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு லீற்றறைக் கண்காணிக்கும் அடிப்படையில் வழங்குதல் மற்றும் மாற்றுதல். மாதாந்த நிதிக்கூற்று தயாரிப்பதற்காக பெறுமதிகள் மாதந்தோறும் சரிசெய்யப்பட்டு வருகின்றன, மேலும் 2020 ஆம் ஆண்டில் பெறுமதிகள் இணக்கத்தின் அடிப்படையில் மூலப்பொருள் வேறுபாடு இனங்காணப்பட்டன. | |

| **கிடைக்கப்பெற்ற விடயம்** | **தொகை** | **சான்றுகளின்மை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | | | |
| (அ) ஐஆர்டி மற்றும் சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையானது, அதைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தொடர்ந்து அனுப்பப்பட்டது. | 1,135.8 | வரி திரும்பல், விலைப்பட்டியல் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் | ஷிப்பிங் செயல்பாடு மூலம் சரிபார்த்த பின்னர், 2021 நிதியாண்டில் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் கணக்குப் புத்தகங்களிலலுள்ள தொகையானது பதிவழிப்பு செய்யப்பட்டது. ஏனெனில், இனங்காணப்பட்ட ரூபா.1,135.8 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத்திலிருந்து பெறப்படவில்லை. | நிலுவையில் உள்ள அனைத்து மீதிகளையும் தீர்க்க/அறவிட சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ)செலுத்தப்பட வேண்டிய மீதிகள் | 30.13 | செலுத்த வேண்டியவை மற்றும் பிற துணை ஆவணங்களின் விவர அட்டவணை. | நிலுவையில் உள்ளவர்கள் உரிய நேரத்தில் விடுவிக்கப்படும். | நிலுவையாக உள்ளவற்றை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) உரிமைச் சொத்து | 1.02 | சொத்துக்கள் விபர அட்டவணை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | பொருத்தமான கருத்து எதுவும் வழங்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் பற்றிய சரியான பதிவேடுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) இரண்டு போலி கணக்குகள், அதாவது “RF போலி கணக்கு, மற்றும் HO போலி கணக்கு” | - | திரும்பப் பெறுவதற்கான/பபதழிப்பதற்கான சாத்தியக் கூறுகளுக்கான விளக்கம் | “RF போலிக்கணக்கு மற்றும் HO போலிக்கணக்கு” 2021 நிதியாண்டில் பணிப்பாளர் சபையிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்ற பிறகு தீர்க்கப்பட்டது. | பதிவழிப்பதற்கு முன் இனங்காணப்படாத நிலுவைகளை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) பெறுமதி சேர் வரியில் பெறப்பட வேண்டியவைகள் | 326.4 | வரிவிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | உள்நாட்டு கொள்வனவு மீதான VAT உள்ளீடு மீளப்பெறப்படவில்லை மற்றும் இறக்குமதி ரூபா. 128.14 பெறுமதியான தொகை 2021 ஆம் ஆண்டுக்கு முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளது, மேலும் இந்தத் தொகைகள் 2021 ஆம் ஆண்டு VAT வெளியீட்டுக்கு எதிராக அறவிடப்படும். | IRD உடன் நிலுவையாகவுள்ளஅனைத்து நிலுவைகளையும் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து வரி பெறவேண்டியவைகள் | 376 | வரிவிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | 2002/2003 ஆம் ஆண்டுக்கான வருமான வரிப் பொறுப்புக்கு எதிராக ரூபா.376 மில்லியன் முற்பண வருமான வரித் தொகையை அமைக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஒப்புக்கொண்டது, அதன்படி ரூபா.376 மில்லியன் வருமான வரி செலுத்தப்பட வேண்டிய கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்கவும், IRD இல் நிலுவையாகவுள்ளஅனைத்து நிலுவைகளையும் தீர்க்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் வரவு மீதிகள் | 749.66 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அதனுடன் | ரூபா.749.66 மில்லியனில் ரூபா. 401.39 மில்லியன் 2021 நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | மீதியாகவுள்ளவை உரிய நேரத்தில் தீர்க்கப்படும். | பதிவுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) வழியில் சரக்கு மற்றும் வழியில் காசு | 7.6 | நிலுவைகளை உறுதிப்படுத்த தொடர்புடைய ஆவணங்கள் | முறைமையின்படி ரூபா. 7,651,679 பெறுமதியான வழியில் சரக்கு நிலுவையில் உள்ள தொகையை தீர்க்க விசாரணைகள் மற்றும் நீதிமன்ற வழக்கு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மொத்தமானது இறுதிப் சரக்கின் கீழ் கணக்கிடப்பட்டு அதே தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் எந்தவிதமான பொருண்மையான விளைவுகளில்லை. | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) 7,718KL பெற்றோலிய பொருட்களின் அளவு. | - | பௌதீக இருப்பு சரிபார்த்தல் ஆவணங்கள் | முழுமையடையாத கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக நிலுவையை தீர்ப்பதற்கு CPSTL இற்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றில் மதிப்பீடுகளுடன் பௌதீக கிடைப்பனவு அளவுகள கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) உண்மையான தாமதக்கட்டணம் | | போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் | மீளாய்வாண்டிலன் தாமதக் கட்டணங்கள் மதிப்பிடப்பட்டு அடிப்படையில் வணிகச் செயல்பாட்டால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உண்மைத் தாமதக்கட்டணத்தின் கிரயம் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. ஒதுக்கீட்டின் விபரங்கள் நிதி செயல்பாடுகளுடன் காணப்படுகின்றன. | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)கணக்காய்விற்கு வழங்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின்படி, மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்று காட்டப்பட்டுள்ள வியாபாரக் கடன்பட்டோர்களின் மொத்த வரவு மீதிகள் ரூபா.930,193,687 மற்றும் மொத்த செலவு மீதிகள் ரூபா. 5,048,644 தொகைகள் அறவீடப்படாமல் தீர்ப்பனவு செய்யப்படாமல் 05 வருடங்களுக்கு மேலாக காணப்படுகின்றன. மேலும், இந்த விற்பனையாளர்களுடனான அடுத்தடுத்த கொடுக்கல் வாங்கல் ஏற்கனவே உள்ள நிலுவைகள் தீர்க்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இந்த பெறப்பட வேண்டிய நிலுவைகளை வசூலிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவையில் உள்ள அனைத்து மீதிகளையும் இல்லாதொழிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மாதிரிச் பரிசோதனையின்படி, 96 வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய வியாபார கடன்பட்டோர் மீதிகள் நிதிக்கூற்று காட்டப்பட்டுள்ள தொகைக்கும் மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாக நிலுவையான உறுதிப்படுத்தி பெறப்பட்டிருந்த தொகைக்கும் இடையே வேறுபாட்டை காட்டுகின்றது. அதன்படி, மொத்த வேறுபாடு ரூபா. 2,032 மில்லியன், இது 47 வாடிக்கையாளர்களின் பெறத்தக்க நிலுவைகளை உள்ளடக்கிய ரூபா. 1,528 மில்லியன் மற்றும் 49 வாடிக்கையாளர்களின் நிலுவைகள் ரூபா. 504 மில்லியன்களை ஒப்பிடும் போது பேரேட்டு கணக்கில் இத் தொகைகள் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்டார். CEB, ஏனைய அரசாங்க வாடிக்கையாளர்கள், ஒரு IPP கணக்கு, தனியார் நுகர்வோர் மற்றும் 13 கணக்கு இலக்கங்கள் கொண்ட அக்ரோ இராசயான (Agro Chemical) ஆகியவை பேரேட்டில் நிலுவைகள் மற்றும் வாடிக்கையாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட நிலுவைகளுக்கு இடையே இணக்கம் செய்யப்பட்டுள்ளன. கணக்காய்வு விசாரணையின் மீதுள்ள வாடிக்கையாளர் நிலுவைகள், உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெற்ற திகதியில் வாடிக்கையாளர்களால் உறுதிப்படுத்தப்படும். ஆண்டின் இறுதியில் விதிக்கப்பட்ட கட்டணங்கள் அவர்களுக்குத் தெரியாது. அதன்பிறகு, அவர்கள் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைச் செலுத்துகிறார்கள் மற்றும் தற்போது CPC உடன் எந்த சர்ச்சைகளும் காணப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(இ) வரிகள் மற்றும் தீர்வைகளை மீள அறவிடுதல்**<br>எனது முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று ரூபா 648 மில்லியன் கலால் வரியை உள்ளடக்குகின்ற ஏற்றுமதி சரக்குகளை வெளியேற்றுவதற்கு முன்னர் சுங்கவரி மற்றும் தீர்வையாக செலுத்தப்பட்ட ரூபா.1,617 மில்லியன் தொகையானது 2017 சனவரியிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கட்டணங்களினால் மீளப்பெற அல்லது தீர்க்கப்படிருக்கவில்லை. | ஆட்டோ டீசல் ஷிப்மென்ட் (16/01/2017-BK 03/2017 இன் M/T ஸ்வரனா கலாஸ் 0.05% எரிவாயு எண்ணெய்) தரமானது பெரியளவில் மாற்றமடைந்ததால் சனவரி 2017 மாதத்தில் நிராகரிக்கப்பட்டது மற்றும் CPC செலுத்திய ரூபா.1,617,202 சரக்குகளை வெளியேற்றுவதற்கு முன் சுங்க வரிகள் மற்றும் வரிகள். 26/11/2015 ஆம் திகதியிட்ட I/RLV/2015/01 இலக்க கடிதம் மூலம் சுங்கப் பணிப்பாளர் நாயகம் வழங்கிய அறிவுறுத்தலின் படி, சரக்குகளை துறைமுகத்திலிருந்து அகற்றுவதற்கு முன் செலுத்த வேண்டிய கடமைகள் கூறப்பட்டது. மேலும் 28/12/2015ஆம் திகதியிட்ட MPI/DEV/3/6/4(ii) இலக்க கடிதத்தின் அடிப்படையில் பெற்றோலிய வள மேம்பாட்டு அமைச்சு வழங்கிய உத்தரவின்படி, CPC தொடர்புடைய இறக்குமதியைச் செலுத்திய பின்னரே அடுத்தடுத்த பெற்றோலிய எண்ணெய் சரக்குகளை அனுமதித்துள்ளது. இலங்கை சுங்கத்தால் விதிக்கப்படும் வரிகள். இலங்கை சுங்கத்தின் தடுப்புத் திணைக்களம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தியதன் மூலம், கடமை மற்றும் வரிகளை செலுத்திய பின்னரே கப்பல்களை உள்வர அனுமதித்தது. ஆய்வக சோதனைகளுக்கான மாதிரிகள் வரைதல் மட்டுமே செய்யப்படுகிறது. இந்த காரணத்தால், இந்த ஏற்றுமதியின் தரத்தை சரிபார்க்கும் முன், CPC இறக்குமதி வரிகள் மற்றும் வரிகளை செலுத்த வேண்டியிருந்த தொகையை வசூலிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவையில் உள்ள அனைத்து நிலுவைகளையும் அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ) தண்டப்பண கட்டணம்**<br>முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று திறைசேரியிலிருந்தான மீள்வசக்கட்டல் அடிப்படையில் கப்பல் எரிபொருள் செயற்பாட்டுடன் தொடர்புடைய 2002 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள | இலங்கை சுங்கத்தில் நிலுவையில் உள்ள பொறுப்புகளை நீக்குவதற்காக பொது திறைசேரியின் அறிவுறுத்தல்களின்படி, ரூபா.57,736,913.00 தொகை சுங்கத் திணைக்களத்திற்கு நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக | தொகையை முன்கூட்டியே மீளப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையினைத் தீர்ப்பதற்காக ரூபா 57.7 மில்லியன் தொகை ஒன்று செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இவ் இவ் அறிக்கை திகதி வரை இத்தொகை மீளவசக்கட்டப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்டது. பதுங்கு குழி செயல்பாடுகளை மீண்டும் தொடங்கும் நோக்கத்துடன் CPC 2014 இல் பணம் செலுத்தியது. இவை தொடர்பான விவகாரத்தில் தலையிடுமாறு பொது திறைசேரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | . |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் ஐந்து வருடங்களுக்கு மேலாக ரூபா. 154.59 மில்லியன் பெறுமதியான 20 வரவு மீதிகளும் 1 முதல் 5 வருடங்கள் வரையிலான ரூபா. 1,448.29 மில்லியன் பெறுமதியான 27 வரவு மீதிகளும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. மேலும், நடைமுறையில் உள்ள நிலுவைகளைத் தீர்க்காத விற்பனையாளர்களுடன் கூட்டுத்தாபனமானது அடிக்கடி பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் கடுமையான சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | PV Oil Singapore PTE Ltd இலிருந்து பெறத்தக்க தொகையான ரூபா.130.94 மில்லியன், 5 ஆண்டுகளில் ரூபா.154.59 மில்லியனில் மிகப்பெரிய இருப்புத்தொகையாக உள்ளது. இந்த விற்பனையாளருக்கான சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. . | நிலுவையாகவுள்ள மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ)கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட வயதுப்பகுப்பாய்வின்படி, மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளுடன் தொடர்புடைய ரூபா 35,590.13 மில்லியன் பெறுமதியான 76 விற்பனையாளர்களின் மீதிகள் 5 வருடங்களுக்கு மேலாகத் தீர்க்கப்படாமல் இருந்தன மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் வயதுப்பகுப்பாய்வின்படி, வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளுடன் தொடர்புடைய ரூபா.12,240.66 மில்லியன் பெறுமதியான 739 செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் 1 தொடக்கம் 5 வருடங்கள் வரை தீர்க்கப்படாமல் இருந்தன. இருப்பினும், கூட்டுத்தாபனத்தினால் இந் நிலுவை மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு தொடர்புடைய | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 33.482 மில்லியனானது தேசிய ஈரானிய எண்ணெய் கூட்டுத்தாபனத்திலிருந்து செலுத்த வேண்டிய ரூபா. 35,590.13 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. சர்வதேச அனுமதி பிரச்சினைகள் காரணமாக இந்த தொகையை செலுத்தப்பட முடியவில்லை. மற்றொரு தொகை ரூபா. 90.98 லூனா ஷிப்பிங் & எண்டர்பிரைசஸ் லிமிடெட் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டியதாகக் காட்டப்பட்டுள்ளது. | நிலுவையில் உள்ள அனைத்து மீதிகளையும் அகற்றவும், கொடுக்கல் வாங்கல்களை சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொருத்தமான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. எனவே, கணக்காய்வில் இத்தகைய நிலுவைகளின் துல்லியத்தன்மை மற்றும் உளதாம்தன்மை ஆகியவை சந்தேகத்துக்குரியதாகவே இருந்தது. | | |
| (இ)பெற்றோலியப் பொருட்களைக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்வது தொடர்பாக 250,925,169 அமெரிக்க டாலர்கள் தேசிய ஈரானிய கூட்டுத்தாபனத்திற்கும், தெஹ்ரானுக்கு செலுத்தப்பட வேண்டும், 2013 ஆம் ஆண்டில் ரூபா. 32,344 மில்லியனானது அதற்கு சமனாகக்காணப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்களின்படி, அமெரிக்காவால் ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக, அத்தகைய நிலுவைத் தொகையை செலுத்துவது நிறுத்தப்பட்டது. அத்தகைய இருப்புத்தொகையானது தொடக்கத்திலிருந்தே செலுத்த வேண்டிய தொகையாக, ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும் உள்ள மாற்று விகிதத்திலும், அந்தந்த வருடத்தின் பரிமாற்ற சான்றுகள் அல்லது இழப்புக்கு மாற்றப்பட்ட சரிசெய்தலின் வேறுபாடுகள் காட்டப்படுகிறது. அதன்படி, மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய நிலுவை மற்றும் திரட்டப்பட்ட நாணயமாற்று விகித இழப்பு (2012 முதல் 2020 வரை) முறையே ரூபா. 47,933 மில்லியன் மற்றும் ரூபா.15,193 மில்லியன் ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டிற்குட்பட்ட நாணயமாற்று விகித வேறுபாட்டு இழப்பு ரூபா. 2,122 மில்லியன். மேலும், கட்டுப்பாடற்ற வெளிப்புற காரணிகளால் இந்த நிலுவைத்தொகை செலுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்தத் தொகையை மாற்றுப் படிவங்கள் மூலம் செலுத்துவதற்கும், LKR ஐ நீண்ட காலத்திற்கு USDக்கு மேல் படிப்படியாகக் குறைக்கும் சூழ்நிலையில் நிலுவைத் தொகையைத் தீர்க்காமல் இருப்பதற்கான நிதி சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்கும் கூட்டுத்தாபனம் முயற்சி எடுத்ததா என்பதைக் கண்டறிய போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | NIOC நிலுவைத் தொகையைத் தீர்க்க 2019 ஆம் ஆண்டில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 2020 இல் உலகில் கொவிட்-19 நிலைமை காரணமாக, எந்த முயற்சியும் எடுக்கப்பட முடியவில்லை. | கூட்டுத்தாபனத்தால் இது தொடர்பான தொடர்புபட்ட கிரயம் மற்றும் பிற விளைவுகளை குறைக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ஒன்று மீள் செலுத்தத்தக்க வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டதோடு தொழிலாளர்களுடன் தொடர்புடைய ஏனையவைகள் பல வருடங்களாக தீர்க்கப்படாது இருந்தன. எவ்வாறிருப்பினும், நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்தமைக்கான காரணம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | தனிப்பட்ட பணியாளரின் கோரிக்கையைப் பெற்ற பிறகு செலுத்த வேண்டிய நீண்ட நிலுவைத் தொகைகள் தீர்க்கப்படும். அத்தகைய எதிர்கால உரிமைகோரல்களுக்கான ஏற்பாடாக நிதிக்கூற்றில் சில நிலுவைகள் மூலதனமாக வைக்கப்படுகின்றன. | நிலுவையில் உள்ள அனைத்து நிலுவைகளையும் அகற்றவும், கொடுக்கல் வாங்கல்களை சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 தொடர்புள்ள தரப்பினர்கள் மற்றும் தொடர்புள்ள தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இந்தியா எண்ணெய் கூட்டுத்தாபனம் (IOC) 26 யூன் 2020 ஆம் திகதியில் ஒரு வருட காலத்திற்கு கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றோலியம் தொடர்பான தயாரிப்புகளை வழங்குவதற்கான வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்டது. IOC கூட்டுத்தாபனத்தின் கேள்விமனுவை 05 மாதங்களுக்கே விண்ணப்பித்திருந்தது. எவ்வாறாயினும், LIOC ஆனது IOC இன் மொத்த சொந்த துணை கம்பனியாகும். LIOC ஆனது CPSTL இன் 1/3 உரிமையைக் கொண்டுள்ளது, இது கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனியாகும். மறுபுறம், CPSTL மூலம் தொடர்புடைய தரப்பினர் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு தனியொரு போட்டியாளராக LIOC ஆனது காணப்படுகின்றது. எனவே, ஒரு வருட காலத்திற்கு பெற்றோலியப் பொருட்களை வழங்குவதற்கு ஒரே போட்டியாளரை அனுமதிப்பதற்கான காரணத்தை கணக்காய்வில் நியாயப்படுத்த முடியவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தின் தற்போதைய வழங்குனர் பதிவுச் செயல்முறையில் பொருத்தமானவையா என கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்த முடியவில்லை. | 26/11/2020 ஆம் திகதியில் நடைபெற்ற சிறப்பு அமைச்சரவை நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு (SSCAPC) ஏற்படுத்திய ஆட்சேபனையின் காரணமாக, CPC உடன் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியலில் இருந்து IOC நீக்கப்பட்டது. 2017 இல் துறைமுகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அவசரகால சரக்குகளைத் தவிர வேறு எந்த சரக்குகளும் அவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. (குறிப்பு. BK/88/2017 - Jet A1). நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (STEC) பரிந்துரைகளுடன் SSCAPC இலிருந்து பெறப்பட்ட அனுமதியுடன் CPC செயன்முறைகளைப் பின்பற்றுகின்றது. தற்போதுள்ள பதிவு செயல்முறையை மாற்றுவதற்கான பரிந்துரைகள் CPC ஆல் வரவேற்கப்படுகின்றன, இது புதிய வழங்குனர்களை எந்த குறிப்பிட்ட காலக்கெடுவுமில்லாமல் விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுகிறது, ஆனால் எந்த நேரத்திலும் வழங்குனர்கள் பதிவுக்கு விண்ணப்பிக்க தயாராகவுள்ளனர். பங்கேற்பாளர்களின் பட்டியலை அதிகரிப்பதன் மூலம் போட்டியை அதிகரிக்க செய்யப்படுகிறது. | பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களாக ஏற்றுக்கொள்வதற்கு முன் வழங்குனர்கள் சரியான மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மூன்றாம் தரப்பினரிடமிருந்து தேவையற்ற அணுகலைத் தடுக்கும் வகையில், கூட்டுத்தாபனத்தின் வழங்குனர் பதிவு செயல்முறை செயற்படுத்தப்பட வேண்டும். |

**1.8 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை வழிகாட்டல்கள் | | | |
| (i) 5.2.2 ஆம் வழிகாட்டல | மூலதன கருத்திட்டங்களுக்கு முறையான சாத்தியப்பாட்டுக் கற்கைகள் ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்டன. | CPC ஆண்டு வரவு செலவுத் திட்ட கலந்துரையாடலில் மூலதனத் திட்டங்களை மதிப்பீடு செய்யப்படுகின்றது, அதன்படி மதிப்புகள் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும். |
| (ii) 7.2 ஆம் வழிகாட்டல் | கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வியாபாரம், நிலக்கரி வியாபாரம், கப்பல் எரிபொருள் வியாபாரம் மற்றும் விவசாய இரசாயன வியாபாரம் போன்ற பாரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய செயற்பாட்டுக் கைநூலை கூட்டுத்தாபனம் தயாரித்திருக்கவில்லை. | பெறுகை கையேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நிறைவடைய செய்ய திட்டமிடப்பட்டுள்ளது | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும். |
| (iii) 9.3 ஆம் வழிகாட்டல் | பொருத்தமான அமைச்சு, பொதுத் திறைசேரி, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கூட்டுத்தாபனம் | முன்மொழியப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்கான தயாரிப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் ஏறக்குறைய நிறைவடைந்துள்ளன. அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், “A” தர பதவிகளை உள்ளடக்கிய பதவி வெற்றிடங்களின் கடமைகளை மேற்கொளவ்தற்காக 03 மாதங்களுக்கு மேலாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். | 06.10.2020 முதல் 37 பதில் கடமை ஏற்பாடுகள் இருந்தன, இந்த எண்ணிக்கை 14.07.2021க்குள் 21 ஆகக் குறைக்கப்பட்டது. நாட்டில் நிலவும் தொற்றுநோய் நிலைமை காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு வினைத்திறனாக செயற்பட முடியவில்லை. எவ்வாறாயினும், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி வெற்றிடங்களை நிரப்பப்படும் என்றும், அனைத்து பதில் செயற்பாட்டுகள் இரத்து செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறோம். | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் |
| (இ) நிதி ஒழுங்கு விதி 396 | வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் காசோலைகளானவை பழையதாகக் கருதப்படுவதோடு ஆரம்பக் கொடுக்கல் வாங்கலை மாற்றுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், 64 காசோலைகளின் பெறுமதி ரூபா.34,911,295 வழங்கப்பட்டது ஆனால் சமர்ப்பிக்கப்படவில்லை. தொடர்ந்தும் காசோலைகள் மீளளிக்கப்படாது காணப்பட்டது. | சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்கான எதிர்பதிவு செயற்பாட்டில் உள்ளது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 2,370.96 மில்லியன் தொகையான இலாபடானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா. 11,835.6 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 14,206.56 மில்லியன் தொகையான

முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கொவிட் தொற்றுக் காரணமாக உலக சந்தையில் எரிபொருட்களின் விலை வீழ்ச்சி ஏற்ப்பட்டிருந்தமையே அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கூட்டுத்தாபனம் | | தொகுதி | |
|---|---|---|---|---|
| **விகிதங்கள்** | **2020** | **2019** | **2020** | **2019** |
| **இலாபத் தன்மை விகிதங்கள்** | | | | |
| மொத்த இலாப/ (நட்ட) விகிதம் (ஜீபீ) (%) | 10.80 | 0.68 | 9.50 | (0.59) |
| செயற்பாட்டு இலாப/ (நட்ட) விகிதம்(%) | 6.65 | (3.02) | 7.00 | (2.63) |
| தேறிய இலாப/ (நட்ட) விகிதம் (என்பீ)(%) | 0.46 | (1.88) | 0.84 | (1.62) |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.45 | 0.47 | 0.47 | 0.49 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.36 | 0.36 | 0.38 | 0.38 |
| **முதலீட்டு விகிதங்கள்** | | | | |
| ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான திரும்பல் (ஆர்ஓசிஈ)(%) | (8.73) | (1.00) | (10.58) | (2.15) |
| இணைவு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | (1.44) | (1.06) | (1.57) | (1.14) |

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப/ (நட்ட)விகிதம், செயற்பாட்டு இலாப/(நட்ட) மற்றும் தேறிய இலாப/ (நட்ட) விகிதம் முறையே 1504 சதவீதம், 320 சதவீதம் மற்றும் 125 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான திரும்பல் (ஆர்ஓசிஈ) 777 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னையாண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் மீண்டும் கூறப்பட்டபடி, கூட்டுத்தாபனமும் CPSTL இற்கும் இடையே எந்த ஒப்பந்தமோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தமோ (MOU) ஏற்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மற்றும் LIOC, CPSTL ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன வள திட்டமிடல் (ERP) முறைமையில் ஈடுபாடுதல் தொடர்பான அவர்களின் தனிப்பட்ட பொறுப்புகள் தொடர்பாக, மேலும் இந்த முறைமை போதுமான அளவு குறிப்பாக எரிபொருள் இருப்பு மீளாய்வு நோக்கங்களுக்காக மற்றும் சுத்திகரிப்பு செயல்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | SAP ERP அமைப்புக்காக CPC, LIOC & CPSTL இடையே எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்படவில்லை. இருப்பினும், சபை மேற்கொண்ட தீர்மானத்தின் படி, CPC மற்றும் CPSTL இடையே இரு தரப்பினருக்கும் ஒப்பந்தம் வரைவு செய்யப்பட்டது. அதன்பிறகு, ஈஆர்பி வழிகாட்டுதல் சபைக்கூட்டத்தில் செயற்படுத்தப்பட்ட படி, வரைவு முத்தரப்பு ஒப்பந்தம் மற்றும் SAP மென்பொருள் இறுதிப் பயனர் மதிப்பு உரிம ஒப்பந்தத்திற்கான அவதானிப்புகளைக் கோரியுள்ளோம். | கூட்டுத்தாபனத்தினால் மேலும் காலதாமதமில்லாமல் தொடர்புடைய அனைத்து தரப்பினருடனும் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். |
| (அ) பின்வரும் அவதானிப்புக்களானவை பொதுப் பாவனையாளர் வசதிகள் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) இலங்கை அரசாங்கம் (GOSL), கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவற்றுக்கிடையே 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தமானது (GOSL/ CPC/LIOC) ஒப்பந்தத்தின் பதினைந தாம் பிரிவின் விதிமுறைகளுக்கு ஏற்ப 2008 திசெம்பர் 31 ஆம் திகதி காலாவதியானது. நிறுவனங்களின் ஆளுகை செயல்முறை மற்றும் உற்பத்தி செலவினைத் தீரமானிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் விலையிடும் சூத்திரம் மற்றும் சிலப் (ளடயடி) கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துச் | CPC மற்றும் CPSTL க்கு இடையே செயற்பாட்டுக் கட்டணம் மற்றும் போக்குவரத்து செலவுகளை தீர்மானிக்க ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. முறையாக ஒப்புக்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்க தனி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளர், CPC மற்றும் CPSTL உடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் இறுதி தீர்மானம் ஒப்பந்தத்தில் இணைக்கப்பட வேண்டும். | கூட்டுத்தாபனம் தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு இணைக்கப்பட வேண்டும் |

செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் உள்வ ாங்கப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகளானவை, தொடர்புடைய எல்லாத் தரப்பினரதும் ஒப்பந்தத்துடன் புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. (இறுதியாக 2011 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது.)

(ii) 2019 மே 13 ஆம் திகதி லங்கா இந்தியன் ஒயில் கம்பனி இல்லாது கூட்டுத்தாபனமானது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்லிமிடட்டுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது. இவ் ஒப்பந்தத்தின்படி, பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இவ் ஒப்பந்தத்தின்படி, பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலிம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே உற்பத்திகளைத் தீர்மானிக்கும் முறை ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் 2003 திசெம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தத்தின் (GOSL/CPC/LIOC) பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக இருக்கக்கூடிய லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இதே விடயத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் வரையறை செய்யப்படவில்லை. எனவே, கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை இந்தியன ் ஒயில் கம்பனி ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மறுக்கின்ற பொழுது கூட்டுதத்தாபனமானது சாதகமற்ற

2019 இல் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் CPC இற்கும் CPSTL இற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டு CPSTL ஆல் CPC இற்கு சேவைகள் வழங்கப்பட்டு உள்ளது. சில விதிமுறைகளை திருத்தும் வகையில் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் தலையீட்டில் தரப்பினர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. CPSTL மற்றும் LIOC இற்கும் இடையே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட முடியாது. CPC க்கு CPSTL இன் 2/3 பங்குதாரராக 06 பணிப்பாளர்களை நியமிக்க உரிமை உண்டு மேலும் சரபயின் கோரிக்கைக்கமைய 03 பணிப்பாளர்களாக உள்ளது, அவர்களில் இருவர் CPC இலிருந்து இருக்க வேண்டும் மற்றும் ஒருவர் லங்கா IOC ஆக இருக்க வேண்டும்.

எனவே, சிபிஎஸ்டிஎல் எல்ஐஓசியுடன் எந்த ஒப்பந்தத்திலும் இணைந்து கொள்ளவில்லை சிபிசிக்கு ஏதேனும் பாதகமான விளைவை ஏற்படுத்தும்.

கூட்டுத்தாபனம் தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும்

| | | |
|---|---|---|
| நிலைமைகளின் ஏதேனும் தாக்கம் மற்றும் செலவுகளை ஏற்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) 2019 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதிய 43/1227 ஆம் இலக்க நிர்வாகக்குழு தீர்மானத்தின் படி 2019 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உற்பத்திக் கட்டணத்தினை அதிகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதன் விளைவாக, 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்கு கூட்டுத்தாபனமானது ரூபா 173.77 மில்லியன் மேலதிகத் தொகையினைச் செலுத்த வேண்டியிருந்தது. இருப்பினும், கூட்டுத்தாபனம் இற்றைவரை நிலுவைத் தொகையை மீளப்பெற தவறியமை. | 2019 சனவரி முதல் சம்பள திருத்தத்துடன் செயல்திறன் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது சபையின் தீர்மானத்தின் படி, 01.04.2021 வரை இவை அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கணக்காய்வு பந்தியின் படி, CPSTL இலிருந்து இந்தத் தொகையை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெற்றியடையவில்லை. | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) 2003 திசெம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட (GOSL/CPC/LIOC ஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தம் மற்றும் 2019 மே 13 ஆந் திகதி கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பவற்றுக்கு ஏற்ப குழாய் அமைப்புகள் அல்லது குழாய் அமைப்புகளின் பகுதியினை ஏற்றுக் கொள ்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப பேணல் மற்றும் 02 மாத காலத்திற்கான எரிபொருள் களஞ்சிய வசதிகளை வழங்குதல் என்பன சீபிஎஸ்டிஎல் இன் கடமையாகும். எவ்வாறாயினும் குழாய் அமைப்பில் அமைப்பில் உள்ள தடைகள் மற்றும் களஞ்சிய முறைமையின் வினைத்திறன் இன்மை காரணமாக கொள்கலன் ஒன்றில் இருந்து எரிபொருளை இறக்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக கூட்டுத்தாபனமானது தாமதக் கட்டணம் செலுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. அதன்படி மொத்தமாக 2.7 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை ஒன்றினைச் செலுத்தி வந்ததோடு அத்தகைய செலவினை சேவை வழங்குனருக்கு மாற்றாமல் கடந்த 6 வருடங்களாக செலுத்தி வந்தது. | திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன். | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். . |

| | | |
|---|---|---|
| (v)2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை எண்ணெய் நிலையம் வரை 12″ விட்டம் மற்றும் 5,500 மீற்றர் நீளமான குழாய் புனரமைப்பு தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 250 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, எதிர்காலத்தில் செலுத்தப்பட்ட தொகையை மீட்டெடுப்பதற்காக கட்டம0 ள CPSTL உடன் ஏதேனும் பேச்சுவார்த்தை நடத்தயோ அல்லது ஏதாவது ஒப்பந்தங்களோ கூட்டுத்தாபனத்தினால் ேற்கொள்ளப்படவில்லை. எனவே, ஏனைய பங்குதாரரின் பங்களிப்பு இல்லாமல், கூட்டுத்தபனத்தினால் துணைக்கம்பனியான CPSTL இன் மூலதன அதிகரிப்பு மொத்தக் கிரயத்தில் தங்கியுள்ளதாக கணக்காய்வில் விசாரனையாகவுள்ளது. | 03.07.2019 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில், ‘‘கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவைக்கு எண்ணெய்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணியை முன்னெடுப்பதற்காக குடியேற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதல்’’ என்ற தலைப்பில், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு தீர்மானிக்கப்பட்டது மற்றும் பெற்றோலிய வளங்கள அபிவிருத்தி மேற்கூறிய குழாய்களை மாற்றுவதன் 50% கிரயம் மூலம் CPC பெறக்கூடிய நிதி நன்மைகளைக் கருத்தில் கொண்டு, இடமாற்றச் செலவில மீதி 50% பொது திறைசேரியில் பெறக்கூடிய நிதி நன்மைகளை கருத்தில் கொண்டு, CPC இற்கு உத்தரவிட வேண்டும். CPC இன் பணிப்பாளர் சபை UDA இற்கு உண்மையான செலவில் 50% செலுத்த முடிவு செய்துள்ளது.<br><br>CPC இனால் மேற்கொள்ளப்பட்ட முற்பணம் ரூபா. 250 மில்லியன் பெறுமதியாகும். இந்த முற்பணத்தினை அறவிட்டுக் கொளவதற்கு செயற்பாட்க் கட்டணத்தின் கீழ்நோக்கிய குறைப்பைப் பெறும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, சிபிஎஸ்டிஎல் கம்பனியுடன் ரூபா.250 மில்லியனை அறவிட்டுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (v) ஒப்பந்தத்தின்படி உற்பத்திச் செலவுகளானவை களஞ்சிய முனையச் செலவு மற்றும் இலாப எல்லை ஆகியவற்றை உள்ளடக்குவதோடு களஞ்சிய முனையச் செலவானது | CPSTL இன் வாடகை பவுசர் போக்குவரத்தைத் தவிர்த்து செலவினக் கூறுகளைக் கருத்தில் கொண்டு 2019 ஏப்ரலில் செயல்திறன் கட்டணம் | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| தனிப்பட்ட செலவு, மேந்தலை செலவு மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் CPSTL இன் சொத்துத் அடிப்படையிலான தேய்மானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டின் போக்குவரத்துக் கட்டணங்களானவை ஒப்புக்கொள்ளப்பட்ட உற்பத்திக் கட்டணங்களில ˙ இருந்து வேறுபட்டது என இது குறிக்கின்றது. எவ்வாறாயினும், சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துடன் தொடர்புடைய செலவுகளானவை உற்பத்திக் கட்டணங்களின் களஞ்சிய முனையச் செலவினை தீர்மானிக்கும் போது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துக் கட்டணங்களின் மீள் நிதியிடலானது நகல் செய்யப்படக் கூடும். கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின் படி மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் இற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்துக் கட்டணமாக ரூபா. 2,506 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | 27% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது இருப்பினும், CPSTL இற்கு சொந்தமான பவுசர் படைகள் செலுத்தப்பட்ட நகல் போக்குவரத்து செலவுகளை மீட்டெடுப்பதற்காக CPC ஏற்கனவே 5% செயல்திறன் கட்டணத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (vi) 2003 திசெம்பர் 30 ஆம் திகதிய (GOSL/CPC/LIOCஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தின் படி, களஞ்சிய முனையச் செலவானது “வருடத்துக்கு 12 சதவீதம் என்ற வட்டி விகிதத்தின் அடிப்படையில் கம்பனியில் கடன் அளிக்கப்பட்டுள்ளதோடு களஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒரு பகுதியை உருவாக்குதல் மற்றும் பணப்பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட மேலதிகக் கடன்கள்” என்பதாகும். இவ் ஒப்பந்தமானது 2008 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்தது. எவ்வாறிருப்பினும், ஒப்பந்தம் முடிவடைந்ததன் பின்னர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டினால் 2009 ஆம் ஆண்டு மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காக ரூபா 2,183 மில்லியனுக்கு மேற்பட்ட ஒரு வட்டித் தொகை 2009 முதல் 2016 வரையான காலப்பகுதி வரை கூட்டுத்தாபனத்தில் | குறிப்பிடப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டது. அத்தகைய கட்டணமானது முறையான மதிப்பீடு இல்லாமலும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி செலுத்த வேண்டிய உண்மைத் தொகையினை உறுதிப்படுத்தாமலும் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | | |
| (vii) ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப குழாய் அமைப்புக்களை பராமரித்தலும் போதிய அளவிலான களஞ்சிய வசதிகளை வழங்குவதுமே துணை கம்பனியான சிபிஎஸ்ரிஎல் இன் பிரதான வகிபாகம் ஆகும். அதன்படி, நாட்டின் எரிபொருள் வழங்கலின் களஞ்சியப்படுத்தல் மற்றும் முனைய வசதிகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கென கட்டணமாக குறிப்பிடத்தக்க அளவு நிதி சிபிஎஸ்ரிஎல் இற்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் ஆனது ரூபா.1,000 மில்லியனை தேய்மானமாக அறவிட்டிருந்ததோடு கடந்த 11 வருடங்களுக்கான தொகையானது ரூபா 11,000 மில்லியன் ஆகும். இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியின் போது சிபிஎஸ்ரிஎல் ஆல் இலாப எல்லையாக ரூபா 2,738 மில்லியன் அறவிடப்பட்டதோடு கடந்த 11 வருடங்களாக சிபிசி மற்றும் எல்ஓஎல்சி ஆகியவற்றில் இருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகையானது ரூபா 43,540 மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும் சிபிஎஸ்ரிஎல் ஆனது புதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காகவும் நடைமுறையிலுள்ள வசதிகளை பேணுவதற்காகவும் உடனடியாக ஏதேனும் சாதகமான நடவடிக்கையினை மேற்கொண்டுளள்தா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. | திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன். | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். <br>. |
| (இ) மீளாய்வாண்டில் வெளிநாட்டு நாணயமாக மாற்றும் குறுங்கால கடன்களை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கூட்டுத்தாபனத்தினால் மேலதிக வட்டி செலவினம் ரூபா.699 மில்லியன் பெறுமதியானது | CPC இன் கைகளில் இலங்கை ரூபாய் போதுமானதாக இருந்தாலும், இரண்டு அரச வங்கிகள் USD நாணயத்தை CPCக்கு விற்பனை செய்ய முடியும். இரண்டு அரச | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தன. | வங்கிகளால் CPCஇற்கு போதுமான USD விற்கப்படாவிட்டால் மற்றும் CPC இலங்கை ரூபாயை கைகளில் வைத்திருந்தால். USD கடன்களைத் தீர்க்காததால் ஏற்படும் வட்டிச் செலவைக் குறைக்க இத்தகைய நிதிகள் முதலீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் மேலதிக வட்டிச் செலவினத்திற்கு செலுத்துவதற்கு எதிராக சிபிசி ரூபா.2,574 வட்டி வருமானத்தை 2020ஆம் ஆண்டில் ஈட்டியுள்ளது. | |
| (ஈ)கடந்த வருட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தமாக ரூபா 91,722 மில்லியன் நிலுவை மீதியைக் குறிக்கின்ற இலங்கை மின்சார சபை உள்ளிட்ட 13 பாரிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் வழங்கலுக்காக முறையான ஓர் ஒப்பந்தத்தைப் கொண்டிருக்கவில்லை. | எரிசக்தி அமைச்சு மற்றும் மின் அமைச்சு ஆகிய இரண்டின் தலையீட்டின் மூலம் CEB உடன் எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம் (FSA) கையெழுத்திடுவது நடைபெற்றுக்கொண்டுள்ளது. இருப்பினும் CPC ஏற்கனவே M/s. Westcoast Power (Pvt) போன்ற முக்கிய சுயாதீன மின் உற்பத்தி நிலையங்களான லிமிடெட் யுகதனவி பவர் பிளாண்ட் & எம்/எஸ். சோஜிட்ஸ் கெலனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்திற்கான சோஜிட்ஸ் கெலனிதிஸ்ஸ பிரைவேட் லிமிடெட் ஆகியோருடன் FSA உடன் ஆரம்பிக்கப்பட்டுளளது. மேலும், CPC ஆனது கோரளப்பிட்டிய இணைக்கப்பட்ட சூழற்ச்சி மின்சக்தியிலிருந்து 350 MW பெறுவதற்கு 19.07.2021 ஆம் திகதியில் சோபதெனவி லிமிட்டட்டுடன் FSA இற்கு உடன்பட்டுள்ளது. CPC இன் வணிக நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டதன்படி, CPC ஆனது ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் உடன் FSA ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. | கூட்டுத்தாபனம பிரதான வாடிக்கையாளர்களுடன் முறையான ஒப்பந்தங்களை மேற்கொள் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) **இடர் குறைப்பு பரிவர்த்தனைகள்**<br>2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இழப்புக்காப்பு பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் படி, 2020 திசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அப் பரிவர்த்தனைகளால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டமானது ரூபா 14,028 மில்லியனாகும். மேலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொமர்ஷல் வங்கியானது 8,648,300 அமெரிக்க டொலர்களை உரிமை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. | இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையாக காணப்படுகின்றது. | இவ்விடயத்தை முன்கூட்டியே தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல்**<br>தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையில் உள்ள பெற்றோலிய களஞ்சிய கொள்திறன் போதுமான தன்மையை மதிப்பீடு செய்து தற்பொழுது இலங்கையில் செயற்பாட்டில் உள்ள எரிபொருள் போக்குவரத்து குழாய் அமைப்பு முறைமையின் பொருத்தப்பாடு மற்றும் உற்பத்தித்திறன், புகையிரதம் மற்றும் பவுசர் வண்டிகளின் போக்குவரத்து முறைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்து நாட்டிலுள்ள பெற்றோலிய கட்டிடத் தொகுதி மற்றும் எரிபொருள் போக்குவரத்து ஆகியவற்றில் சுமூகமான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்கின்றதுமான எனது விசேட அறிக்கையானது பாராளுமன்றத்தில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் இதை பதிவிற்க்கம் செய்ய முடியும. | கருத்துக்களுடன் உடன்பட்டர். | கூட்டுத்தாபனத்தினால் சரியாக மதிப்பீடு செய்து பரிந்துரை அறிக்கையின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டில் உள்ள பெற்றோலிய களஞ்சிய வளாகம் மற்றும் எரிபொருள் போக்குவரத்து முறைமையில் சீரான மற்றும் பாதுகாப்பான செயல்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அவதானிக்கப்பட வேண்டும். |

**(ஆ) திருகோணமலை தாங்கிப் பண்ணை**

திருகோணமலை தாங்கிப் பண்ணையில் 100 எண்ணெய்த் தாங்கிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர் ($m^3$)(10,000MT) கொள்ளளவினைக் கொண்டுள்ளன. மற்றும் தொடர்புபட்ட ஏனைய வசதிகளானவை 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. தாங்கிப் பண்ணைக்கு சொந்தமான நிலப் பரப்பானது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் பிரித்தானிய அரசாங்கத்தின் Lord High Admiraltyஇன் ஆணையாளர்களுக்கு 999 வருடங்களுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1960 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுத்தாபனமானது மூன்று தவணைகளில் 250,000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுணகளை செலுத்தியது. 1964 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் காணி, எண்ணைத் தாங்கி கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான உரிமையைப் பெற்றுக்கொண்டது. இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட நிலத்திற்காக இதுவரை அரசாங்கத்திடமிருந்து எந்த ஒரு சட்டரீதியான ஆவணமும் பெறப்படவில்லை. 2003 ஆம் ஆண்டு 35 வருட காலங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் நிலத்தினை எல்ஐஓசி கம்பனிக்கு குத்தகைக்கு விடுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் எல்ஐஓசி கம்பனிக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோடு ஒப்பந்தமானது ஒப்பந்த திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது. கூட்டுத்தாபனமானது எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை அல்லது தாங்கிகளைப் பயன்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் 2003 ஆம் ஆண்டிலிருந்து எல்ஐஓசி கம்பனியானது இச் சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்றது.

பின்னணி உள்ளடக்கத்துடன் உடன்பட்டது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டு முதல் CPC திருகோணமலை மேல்தாங்கிப் பண்ணைக்கான பல அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்துள்ளதுடன், தாங்கிகளின் பயன்பாட்டிற்கான CPC இன் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இற்றைவரை உத்தரவு கிடைக்கப்படவில்லை.

பண்ணையின் உரிமையை தெளிவுபடுத்தவும் மற்றும் பண்ணையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பெற்றோலியம் தொடர்பான தொழிலை தொடங்கவும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

**(இ)சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்**

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 49 ஆண்டுகள்

தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காணப்பட்டதைப் போன்று தற்போது காணப்படுகின்ற ஐந்து தசாப்தமான சுத்திகரிப்புச் சாலை (1969 இல் ஆரம்பிக்கப்பட்டு) ஒரு அடிப்படையிலான சுத்திகரிப்பு சாலையாக காணப்படுகின்றதுடன் நாட்டில் பெற்றோலியப் பொருட்களுக்கு காணப்படும் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு முடியாததாகக் காணப்படுகின்றதுடன், குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்களினை வெளியிடுவதற்கு வசதிகள் உள்ளடங்கலாக உயர்தர தொழில்நுட்பங்களுடன் செயற்படுகின்ற மற்றும் சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனை உத்தமப்படுத்துவதன் மூலம் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற தரம்குறைந்த பொருட்களினை உயர் பெறுமதியுடைய பொருட்களுக்கு மேம்படுத்துவதற்கான திறன்களினுடைய சுத்திகரிப்புச் சாலைகளுடன் ஒப்பிடும் போது இந்த சுத்திகரிப்புச் சாலை குறைந்த இலாபத்துடன் செயற்படுகின்றது. எவ்வாறாயினும், கிரய வினைத்திறனான முறையொன்றில் சந்தைக்கு பெற்றோலியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முன்மொழியப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (எஸ்ஓஆர்ஈ) சீபிசீ இனால் அமுல்படுத்த முடியாததாகக் காணப்பட்டது. மேலும் 1003 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணியானது இவ் அறிக்கையினை மேற்கொள்ளும் திகதி வரையிலும் விளைவற்ற நிலையிலேயே உள்ளது.

பழமையானது, ஆனால் தயாரிப்பு விபரக்குறிப்புகள் மற்றும் சட்டத் தேவைகள் மாற்றத்துடன் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் சிறிய அபிவிருத்தி வேலைகளுடன் தற்போது கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த கச்சா எண்ணெயைப் பயன்படுத்தி இன்றும் இயங்குகிறது. சுத்திகரிப்பு நிலையத்தில் பீப்பாயின் அடிப்பகுதியை அதிக மதிப்புள்ள பொருட்களாக மாற்றுவதற்கு உலகில் நவீன தொழில்நுட்பங்களுடன் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்பதனால் இலாப எல்லை அதிகரிக்கும். பேலும், தடைசெய்யப்பட்ட சுத்திகரிப்பு கட்டமைப்பு மூலம், சுத்திகரிப்பு நிறுவனம் இலாபத்தை அதிகரிக்க உலகில் கனமான, புளிப்பு மலிவான கச்சா எண்ணெய்களை செயலாக்க செய்யமுடியாது.

நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் (SOREM) திட்டம் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வுடன் தொடங்கப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கான 08 ஆண்டுகளுக்கு குறைவான திருப்பு செலுத்தும் காலத்தை கொண்டு USD 2.1 பில்லியன் முதலீடுகள் கவர்ச்சிகரமாக மேற்கொள்ளப்பட்ட போதும் அரசாங்கத்திடமிருந்து நிதி கிடைக்காமையினால் செயற்படுத்த முடியவில்லை. திட்டம் தாமதமானதால், நாட்டின் அதிகரித்து வரும் தயாரிப்பு தேவை, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது, இது இறுதியில் நாட்டிற்கு கூடுதல் செலவினங்களை ஏற்படுத்துகிறது. SOREM திட்ட அமுலாக்கத்தை எதிர்பார்த்து, சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றிய 35 ஏக்கர்

மேம்படுத்துவதற்கும், நாட்டின் கேள்வியை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு இது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்

காணி கையகப்படுத்தப்பட்டு, அது வேலி அமைத்து CPC இன் உரிமையின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. SOREM திட்டம் செயல்படுத்தப்படாவிட்டாலும், புதிய மற்றும் பழைய காணிகளுக்கு இடையே வீதியின் இடமாற்றம் நடைபெற்று வருகிறது. எதிர்காலத்தில் சுத்திகரிப்பு நிலையத்தை பாதுகாப்பாக இயக்குவதற்கு முதிர்ச்சி காரணத்தால் சில முக்கியமான உபகரணங்களை மாற்ற வேண்டியுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. முக்கியமான செயல்முறை உபகரணங்களை மேற்கூறிய அவசர மாற்றத்துடன், சில நவீன தொழில்நுட்பங்களைப் பெற்று அதிக திறனுக்கு மேம்படுத்தும் போது மேலே குறிப்பிடப்பட்ட உபகரணங்களை மாற்ற 90 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பட்ஜெட் செய்யப்பட்டன. மேற்கூறிய திட்டம் நிறைவடைந்த பிறகு, சுத்திகரிப்பு நிலையம் அதிக ஆண்டுகள் பாதுகாப்பாகவும், மேம்பட்ட இலாபத்துடனும் செயல்பட முடியும். எவ்வாறாயினும், நாட்டின் மொத்த தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஒட்டுமொத்த சுத்திகரிப்பு வளாகத்தின் வளர்ச்சியை எதிர்பார்த்து திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

SOREM திட்ட அமுலாக்கத்திற்காக அரசாங்கத்தின் நிதியைப் பெற முடியாது என்பதும், உள்நாட்டில் கச்சா எண்ணெயை சுத்திகரிப்பதன் மூலம் நாட்டின் தேவையை பூர்த்தி செய்வதற்கான சாத்தியமான விருப்பம் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு முதலீட்டாளர்களை வரவேற்பதே என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 100,000

பீப்பாய்களை சுத்திகரிப்பு செய்யும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க மற்றும் பரிமாற்றம் (BOT) அடிப்படையில் நிறுவுவதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டது. அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில், நாளொன்றுக்கு 100,000 பீப்பாய்கள் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு நடந்து வருகிறது, அதே நேரத்தில் தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தி மற்றும் BURSO VI தரத்திலான உற்பத்தியை தற்போதைய சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்திகளினாலும் இரண்டு சுத்திகரிப்பு நிலையங்களிலும் மொத்த நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

SOREM திட்டத்திற்காக முன்னர் ரூபா.1003 மில்லியன் செலவில் 35 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டு தற்போது செயலிழந்து கிடப்பதாகவும், தற்போது நடைபெற்று வரும் சாத்தியக்கூறு ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் சுத்திகரிப்பு நிலையத்தை கட்டுவதற்கு முதலீட்டாளர் தேர்ந்தெடுக்கப்படும் போது பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. SOREM திட்டத்துடன் ஒப்பிடும்போது தேவையான சுத்திகரிப்புத் திறன் அதிகமாக இருப்பதால், நாட்டின் தேவை மற்றும் இறுதிச் செயலாக்கத்திற்காக அதிக காணிகளை கையகப்படுத்த வேண்டியிருக்கலாம்.”

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) சொத்து முகாமைத்துவம்**<br><br>(i) வனாத்தமுல்லையில் அமைந்துள்ள ஹல்கஹக்கும்புர காணி எல்பி கேஸ் செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானமொன்றினை ஸ்தாபித்தல் நோக்கத்திற்கு ரூபா 10.6 மில்லியனுக்கு இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் காணி குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 700 கட்டுமானங்களுக்கு அதிகமாக அது ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. | இக் காணி 1983 இல் கையகப்படுத்தப்பட்டது. CPC இனால் இழப்பீடாக ரூபா. 10,551,567 செலுத்தப்பட்டுள்ளது.<br><br>இக் காணியை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்துள்ளதால், கௌரவ. சுட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டது. அக்கருத்தின் படி, பாதிக்கப்படக்கூடிய பெரிய குடும்பங்கள் இருப்பதால், அதனால் ஏற்படும் சமூகத் தாக்கம், அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் அல்லது ஏனைய அதிகார சபைகளிம் ஆலோசனை கேட்பது மிகவும் விவேகமாக இருக்கும்.<br><br>காணியை UDA இற்கு ஒப்படைப்பதற்கும், அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் பணம் பெறுவதற்கும் பெற்றோலிய அமைச்சகத்தின் மூலம் CPC ஆல் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை தோல்வியடைந்திருந்தன.<br><br>அதன்பிறகு, பெற்றோலிய அமைச்சகத்தால் ஒரு முதலீட்டாளருக்கு காணியை விற்பனை செய்ய அல்லது முதலீட்டாளருடன் ஒரு செயற்திட்டத்தை செய்து CPC இற்கு மாதாந்தம் பணத்தைப் பெறவும், அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களுக்கு வீட்டுத் திட்டத்தை அமைக்கவும் பரிந்துரை செய்யப்பட்டது. இது காணி ஆணையாளர் நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டதுடன், பரிந்துரைக்கப்பட்டவாறு செயற்படுவதற்கு காணி சுவீகரிப்புச் சட்டத்தில் இடமில்லை என பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ii) மஹன காணி கிடைக்கக்கூடிய கடிதத் தொடர்புகளின் பிரகாரம், அந்த | மேற்கூறப்பட்ட ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட 12 காணிகள் CPC இனால் கையகப்படுத்தப்பட வேண்டும். காணியின் | |

நிலத்தினை ரூபா 0.625 மில்லியன் தொகையொன்றிற்கு கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்ததுடன், அதற்குள் அது கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 1986 இல் கொள்வனவுக்குப் பின்னர் கூட முன்னைய உரிமையாளரினால் அந்த நிலம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

பரப்பளவு 21.18 பேர்ச்சஸ் ஆக காணப்பட்டன. CPC கொலன்னாவ பிரதேச செயலகத்தில் ரூபா. 624,378 இனை வைப்பிலிட்டுள்ளது. பிரதேச செயலாளர் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கியுள்ளார்.

அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு பிரதேச செயலாளர் கொழும்பு நீதவான் நீதிமன்றில் நடவடிக்கை எடுத்திருந்தார். கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரதான காணியில் இருந்து 06 பகுதிளை CPC இற்கு வழங்கியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட ஏழு மேன்முறையீடுகள் தொடர்பில் சிறிசந்த ஹோட்டலில் தங்கியிருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் வெற்றிட உடமைகளினை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மற்றும் இக் காணியின் வெற்று உடைமைகளை ஒப்படைப்பது பிரதேச செயலாளரிடம் உள்ளது.